23.01.2025 - வியாழக்கிழமை

# ஒருவன்

ORUVAN - ඔරුවන්

ஆண்டு: 01 இதழ் : 76 குரோதி வருடம் தை மாதம் 10 ஆம் நாள் - ஹிஜ்ரி 1446 ரஜப் 23 பக்கங்கள் - 12




## கல்லோயாவில் அனைத்து வான்கதவுகளும் திறப்பு

## அம்பாறை மாவட்டத்தில் நிரம்பி வழியும் குளங்கள்

( முகம்மட் முக்தார் )

அம்பாறை மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் அடை மழை காரணமாக மாவட்டத்தில் உள்ள முக்கிய குளங்கள் யாவும் வான்பாய்வதாக அம்பாறை மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

கல்லோயா,பள்ளம் ஓயா, ஏக்கல்ஓயா, கொண்டவட்டுவான், அம்பலன் ஓயா,பன்னல் ஓயா, களுகல்ஓயா, நாமல் ஓய உள்ளிட்ட பல ஆறுகள் நிரம்பி வழிகின்றன.தொடர்ச்சியாக பெய்யும் மழை காரணமாக சேனநாயக்க சமுத்திரத்தின் அனைத்து வான்கதவுகளும் சுமார் 03 அடி உயரத்திற்கு (தொடர்ச்சி...)

02 →

### பெயரில் குழறுபடி..

## அர்ச்சுனா எம்பியின் வழக்கு ஒத்திவைப்பு

(கனூஷியா புஷ்பகுமார்)

சரியான சந்தேகநபரை அடையாளம் காண முடியாததால்,நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா தொடர்பான வழக்கை அநுராதபுரம் நீதவான் நீதிமன்றம் நேற்று (22) ஒத்திவைத்து உத்தரவிட்டது. அதன்படி,குறித்த வழக்கு எதிர்வரும் 3 ஆம் திகதிக்கு (தொடர்ச்சி...)

02 →

### கே.கே.எஸ் - பருத்தித்துறை கடலில் துப்பாக்கி சுடும் பயிற்சி

# எல்லை தாண்ட வேண்டாம்; தமிழகத்தில் எச்சரிக்கை

( திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது )

இலங்கை கடற்படை சார்பில் ஜனவரி 24 மற்றும் 27ஆம் திகதிகளில் துப்பாக்கிச் சுடும் பயிற்சி நடைபெறுவதால், தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி சென்று மீன்பிடிக்க வேண்டாம் என தமிழக மீன்வளத் துறை அறிவுறுத்தியுள்ளது.

இதுகுறித்து தமிழக மீன்வளத் துறை விடுத்துள்ள அறிக்கையில்

02 →



# சட்ட திட்டங்களினால் மாத்திரம் முன்னோக்கிச் செல்ல முடியாது

## பௌத்த பாரம்பரியத்தை பாதுகாத்து எதிர்கால சந்ததியிடம் கையளிக்க வேண்டும்





நடைமுறைச் சட்டங்களினால் மாத்திரம் நாடொன்று முன்னோக்கிச் செல்ல முடியாதெனவும் நாட்டின் பாரம்பரியம் மிக முக்கியமான அம்சமாகும் எனவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

இலங்கை பௌத்த மதத்தின்அடிப்படையில் கட்டியெழுப்பட்ட பாரம்பரியத்தின் ஊடாக சிறப்புக்குரிய பணியை ஆற்றியிருப்பதாகவும், அந்த பாரம்பரியத்தை பாதுகாத்து எதிர்கால சந்ததிகளிடம் பாதுகாப்பாக கையளிக்க வேண்டியது அனைவரினதும் பொறுப்பாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (தொடர்ச்சி...)

02 →



தமிழ்நாட்டில் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமிற்கு நேற்று(22) நேரில் சென்ற தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முகாம் வாழ் தமிழர்களின் தேவைகளை ஆராய்ந்தபோது...

## தேங்காய் இறக்குமதிக்கு தீர்மானம் எதுவுமில்லை



(கனூஷியா )

தேங்காய் இறக்குமதி செய்வது தொடர்பில் அரசாங்கம் எந்த முடிவும் எடுக்கவில்லை என்று கைத்தொழில் மற்றும் தொழில் முனைவோர் (தொடர்ச்சி...)

02 →

## மல்வத்துஓயாவின் நீர்மட்டம் உயர்வு காரியாலயங்கள், வீடுகள் மூழ்கின

(அநுராதபுரம் எம்.ரீ.ஆரிப் )



அநுராதபுரத்தில் நேற்றுமுன்தினம் மாலை பெய்த கனமழை காரணமாக மல்வத்துஓயாவின் நீர்மட்டம் உயர்வடைந்ததன் காரணமாக அநுராதபுரம் சுற்றுலா பொலிஸ், அநுராதபுரம்தொல்லியல் பணிப்பாளர் அலுவலகவளாகம், அநுராதபுரம் ஹோட்டல் பாடசாலை மற்றும் நகரில் பல இடங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

மேல் நீர்த்தேக்க பகுதியில் பெய்து வரும் தொடர் மழை (தொடர்ச்சி...)

02 →

## ரஷ்ய இராணுவத்தில் இணைக்கப்பட்ட தமிழ் இளைஞர்களின் நிலை என்ன?



### சிறீதரன் எம்பி சபையில் கேள்வி

ரஷ்ய இராணுவத்தில் பலவந்தமாக இணைக்கப்பட்ட இலங்கை இளைஞர்கள் உயிருடன் இருக்கின்றனரா என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேற்று (22) நாடாளுமன்றில் கேள்வி எழுப்பினார்.

இலங்கைப் பிரஜைகளான இளைஞர்கள் பலர் சட்ட ரீதியாகவும் சட்டத்திற்கு முரணான வகையிலும் வெளிநாட்டிற்கு செல்லும் போது வெளிநாட்டு முகவர்களால் ஏமாற்றப்படும் சம்பவங்கள் பல தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்றன.இவ்வாறு ஏமாற்றப்பட்ட இளைஞர்கள் பலர் ரஷ்ய இராணுவத்தில் இணைக்கப்பட்டுள்ளனர். இந்தநிலையில், (தொடர்ச்சி...)

02 →

## பறிப்பவற்றை எண்ணி புலம்புபவன் நான் அல்ல

(கனூஷியா புஷ்பகுமார்)



அரசாங்கம் தன்னிடமிருந்து பறிப்பவற்றைப் எண்ணிப் புலம்புபவன் நான் அல்ல என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்தார். கொழும்பு விஜேராம மாவத்தையில் தனக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லத்தை எந்த (தொடர்ச்சி...)

02 →

### கிரிஷ் டிரான்ஸ்வெர்க் முறைகேடு;

## நாமல் ராஜபக்ச நீதிமன்றத்தில் ஆஜர்

(கனூஷியா புஷ்பகுமார்)



கொழும்பு கோட்டையில் உள்ள கிரிஷ் டிரான்ஸ்வெர்க் சதுக்கத்தில் 4.3 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு எடுத்ததில் 70 மில்லியன் ரூபாய் நிதி முறைகேடு நடந்ததாகக் (தொடர்ச்சி...)

02 →

# பலாலி விமான நிலைய விரிவாக்கம்; 114 ஹெக்டேயர் தேவையென அறிவிப்பு

### சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு இன்னமும் இழப்பீடு இல்லை




பலாலியிலுள்ள யாழ்.சர்வதேச விமான நிலையத்தின் ஓடுபாதை விரிவாக்கத்திற்கு 114 ஹெக்டேயர் நிலப்பரப்பு சுவீகரிக்கப்பட வேண்டியுள்ளதாக வடக்கு ஆளுநரிடம் தெரிவித்த விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தினர் அவ்விஸ்தரிப்பு கடல் பகுதியை நோக்கியதாக அமையும் எனவும் தெரிவித்தனர். (தொடர்ச்சி...)

02 →

## இலங்கை - திருச்சிக்கு வந்த விமானத்தில் தங்கக் கட்டிகள்

### கேட்பாரற்று கிடந்த 985 கிராம் தங்கம் மீட்பு



( திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது )

இலங்கையில் இருந்துதிருச்சிக்கு வந்த விமானத்தில் கேட்பாரற்று கிடந்த 985 கிராம் எடையுள்ள 2 தங்க கட்டிகள் மீட்கப்பட்டன. அதேபோல் மற்றொரு பயணியிடம் 4,02,000 இந்திய ரூபாய் மதிப்பிலான இந்திய மற்றும் வெளிநாட்டு நாணயங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

திருச்சி விமான நிலையத்தில் இருந்து உள்நாட்டு விமான சேவைகள் மாத்திரமன்றி மலேசியா, (தொடர்ச்சி...)

02 →

## நெல் கையிருப்பு மறைத்து வைக்கப்படவில்லை

# ஆலை உரிமையாளர்கள் மீது பொய்க் குற்றச்சாட்டு

(கனூஷியா புஷ்பகுமார்)

பாரிய அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள் சிலர் நெல் கையிருப்பை மறைத்து வைத்திருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டாலும் அது பொய்யான தகவல் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

நாட்டினுள் வருடாந்த அரிசித் தேவை மற்றும் நெல் உற்பத்தி தொடர்பில் அரசாங்க தரவுகளில் கடுமையான திரிபு காணப்படுவதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இதன் காரணமாக, இம்முறை அரிசி இறக்குமதியில் சிக்கலான ஒரு நிலைக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது.

அரிசி ஆலை உரிமையாளர்கள் ஒரு பருவத்திலிருந்து அடுத்த பருவத்திற்கு சேகரிக்கும் இருப்புக்களை முறையாக சந்தைக்கு வெளியிடுகிறார்கள் எனவும் அவர்களின் அரிசி ஆலைகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் அவ்வாறான அரிசி அல்லது நெல் கையிருப்புகள் மறைக்கப்பட்டிருந்தமை வெளிப்படவில்லை.

பிரதான ஊடகமொன்றின் அரசியல் கலந்துரையாடல் ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த பருவத்திலிருந்து அரிசிக்கான அதிகபட்ச விலை அதே அளவில் பராமரிக்கப்படும் என்றும், எதிர்காலத்தில் நெல்லுக்கான உத்தரவாத விலை நிர்ணயிக்கப்படும் என்றும், அந்தக் கட்டுப்பாட்டு விலைக்கு மேல் அரிசியை விற்க எந்த வாய்ப்பும் வழங்கப்படாது என்றும் அவர் கூறினார்.

அந்த கட்டுப்பாட்டு விலையில் விற்கக்கூடிய விலையில் நெல் வாங்குமாறு ஆலை உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்படும் என்றும் அநுரகுமார



திசாநாயக்க சுட்டிக்காட்டினார்.

அரசாங்கப் பதிவு இல்லாமல் நெல் இருப்பு வைப்பது முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் இந்த விடயத்தை தாம் உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாகவும் கூறினார்.

# வெளிநாடு அனுப்புவதாக கூறி கோடிக்கணக்கில் நிதி மோசடி

(எம்.ஏ.அமீனுல்லா)

இத்தாலி மற்றும் ருமேனியாவில் வேலை பெற்றுத்தருவதாகக் கூறி இளைஞர்களை ஏமாற்றி பல கோடி ரூபா பணத்தை மோசடி செய்த நபரை நேற்று முன்தினம் (21) கண்டி, தலத்துஓயா பொலிஸ் அதிகாரிகள் குழு கைது செய்துள்ளது. சந்தேக நபர் தனது வங்கி கணக்கிற்கு பல லட்சம் ரூபா பணத்தை மாற்றியுள்ளார் என கண்டி, மைலப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரினால் தலத்துஓயா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து, பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ள நிலையில், இது தொடர்பான தகவல்கள் பொலிஸாருக்கு கிடைத்துள்ளது.

மேலும் தொடர்பான சட்டவிரோத செயற்பாடுகள் பல்வேறு பெயர்களில் சில காலமாக இடம்பெற்று வருவதாக தெரியவந்துள்ளது. முறைப்பாடு செய்த நபருக்குச் சொந்தமான அரச வங்கியொன்றில் பேணப்பட்ட கணக்கிற்கு சந்தேகநபர் ஆறுமாத குறுகிய காலப்பகுதியில் கிட்டத்தட்ட 90 இலட்சம் ரூபாவை மாற்றியுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

முறைப்பாடு செய்தவர் சந்தேகநபரின் நண்பர் எனவும் அவர் கணக்கில் பல லட்சம் ரூபா பணம் வரவு வைக்கப்பட்டமை தொடர்பிலேயே முறைப்பாடு செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## கே.கே.எஸ்...

கூறியிருப்பதாவது : இலங்கையின் வடக்கு பிராந்திய கடற்படையினர், அந்நாட்டில் உள்ள காங்கேசன்துறை மற்றும் பருத்தித்துறை கடற்பகுதியில் பி 475, பி 481 ஆகிய கடற்படை ரோந்து படகு ஃ கப்பல் மூலம் ஜனவரி 24, ஜனவரி 27 ஆகிய இரண்டு நாட்கள் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை துப்பாக்கி சுடும் பயிற்சியில் ஈடுபடுகின்றனர்.

இந்தப் பகுதிகளில் மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என இலங்கை கடற்படை சார்பாக யாழ்ப்பாணம் மீன்வளத்துறை மூலம் அந்நாட்டு அனைத்து மீனவ சங்கங்களுக்கும் அறிவிப்பும் விடுத்துள்ளனர். இந்நிலையில், பாக் ஜலசந்தி கடற்பகுதியில் மீன்பிடிக்கும் மீனவர்கள் சர்வதேச எல்லை தாண்டி சென்று மீன்பிடிக்க வேண்டாம், என மீன்வளத் துறை சார்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## தேங்காய்...

மேம்பாட்டு பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று (22) நாடாளுமன்றத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

உற்பத்தித்திறனை அதிகரிக்கத் தவறியதால் இந்தத் தேங்காய்ப் பிரச்சினை எழுந்ததாக அவர் கூறினார்.

சுமார் 800 மில்லியன் தேங்காய் ஏற்றுமதியாளர்கள் தேங்காய் உற்பத்தி இல்லாமல் தவிப்பதாகவும், எனவே அவர்களின் ஏற்றுமதி செயல்முறைக்குத் தேவையான தேங்காய் பால், தேங்காய் எண்ணெய் உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்களைப் பெற தற்காலிகமாகக் கோரியுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர்,

"அரிசி பிரச்சினையைப் போலவே, தேங்காய் பிரச்சினையும் உற்பத்தித்திறன் அதிகரிக்கப்படாததால் எழுந்தது. சுமார் 800 மில்லியன் மதிப்புள்ள தேங்காய் ஏற்றுமதியாளர்களும் தேங்காய்களை இழந்துள்ளனர்.

எனவே, அவற்றின் ஏற்றுமதி செயல்முறைக்குத் தேவையான தேங்காய் பால், தேங்காய் எண்ணெய் உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்களை தற்காலிகமாகப் பெறுவதற்கான கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. தேங்காய்களை வெளிநாட்டிலிருந்து கொண்டு வருவது குறித்து எந்த தீர்மானமும் எடுக்கப்படவில்லை." எனத் தெரிவித்தார்.

## பறிப்பனவற்றை...

விட்டுச் செல்லத் தயாராக இருப்பதாகவும், ஒரு கணம் கூட அங்கு இருப்பதற்குத் தயாராக இல்லை என்றும் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

உத்தியோகபூர்வ இல்லத்தை மீள வழங்குமாறு எழுத்துமூலமாக இன்னும் தனக்கு அறிவிக்கப்படவில்லை என்றும், அறிவிப்பு கிடைத்தவுடன் வெளியேறுவதாகவும் தெரிவித்த அவர்,

முன்னாள் ஜனாதிபதியாக அரசாங்கத்திடமிருந்து பெற்ற அனைத்தையும் அரசாங்கம் மீளப் பெற்றாலும், மகிந்த ராஜபக்ச புலம்புபவன் அல்ல என்றும் கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் உத்தியோகபூர்வ இல்லத்தின் வாடகை தொடர்பில் அண்மைய நாட்களில் எழுந்த விமர்சனங்கள் தொடர்பில் சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

முன்னாள் அரச ஜனாதிபதிகளுக்கு பொருத்தமான வீடு , வாடகை இல்லாமல் வழங்கப்பட வேண்டும் என்று அரசியலமைப்பு தெளிவாகக் கூறுகிறது. அதன்படி,இந்த அதிகாரபூர்வ இல்லத்தில் வசிக்கிறேன். இது தொடர்பாக தற்போதைய ஜனாதிபதி எந்த தீர்மானத்தையும் எடுக்க முடியும் என்றாலும், இது எனது அரசியல் பயணத்தை நிறுத்தாது என்றும் அவர் கூறினார். முன்னாள் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லம் தொடர்பான ஜனாதிபதியின் பகிரங்க அறிக்கையைத் தொடர்ந்து பல விமர்சனங்கள் வெளியாகி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## ரஷ்ய...

அவர்கள் உயிருடன் இருக்கின்றனரா என சிறீதரன் எம்பி கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த வெளிநாட்டு பிரதி அமைச்சர் அருண் கேமச்சந்திர,வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கள் என்ற அடிப்படையில் இராஜதந்திர ரீதியாக அணுகி வரும் நிலையில், இதற்காக ஒருவார கால அவகாசம் வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

## கிரிஷ்...

கூறப்படும் வழக்கு நேற்று (22) கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் மீண்டும் விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கில் சந்தேக நபராகப் பெயரிடப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவும் நேற்று வழக்கு விசாரணைக்கு நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தார். வழக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது, இந்த சம்பவம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுக்கு எதிராக இலஞ்சம் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு தனி விசாரணையை ஆரம்பித்துள்ளதாக விசாரணை அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். அதன்படி, முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை பரிசீலித்த கோட்டை நீதவான் நிலுபுலி லங்காபுர, கிரிஷ் நிதி மோசடி தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் நீதிமன்றத்தில் நடத்தப்பட்டு வரும் வழக்கை ஜூன் 4ஆம் திகதி சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உத்தரவிட்டார்.

## கல்லோயா...

திறக்கப்பட்டு உபரி நீர் வெளியேற்றப் படுகிறது. இதன் காரணமாக சம்மாந்துறை, சாய்ந்தமருது, அட்டாளைச்சேனை கரையோரப் பிரதேசங்களில் உள்ள மக்களை கவனமாக இருக்குமாறு அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு கோரியுள்ளது. இதேவேளை அடைமழை காரணமாக நெற் கதிர்கள் வெளிவந்த நிலையில் நூற்றுக்கணக்கான ஏக்கர் நெற்காணிகள் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ள நீரில் அமிழ்ந்து சேதமாகியுள்ளன. இறக்காமம், சம்மாந்துறை, அட்டாளைச்சேனை, நிந்தவூர் பிரதேசங்களில் இந்நிலை ஏற்பட்டுள்ளது.

## பலாலி...

பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் விரிவாக்கத்துக்கான நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும்,விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தினருக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று (21) ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டதாக வடக்கு மாகாண ஆளுநரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் அடிப்படை கட்டுமானங்கள் மற்றும் வசதிகளை துரிதமாக மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்த விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தினர், முதல்கட்டத்தில் இந்தப் பணிகளை முழுமைப்படுத்த எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டனர்.

சர்வதேச விமான நிலையத்தின் ஓடுபாதை விரிவாக்கம் முன்னெடுப்பதற்கு 114 ஹெக்டேயர் நிலப் பரப்பு சுவீகரிக்கப்பட வேண்டியுள்ளதாகவும் விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தினர் குறிப்பிட்டனர். கடலை நோக்கியதாக அந்த விஸ்தரிப்பு அமையும் எனவும் ஆளுநருக்கு தெரியப்படுத்தினர்.

காணிகளை சுவீகரிப்பதற்கு முன்னதாக 1986ஆம் ஆண்டு பலாலி விமான நிலையத்துக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட காணிகளுக்கு இன்னமும் இழப்பீடு வழங்கப்படவில்லை என ஆளுநர் சுட்டிக்காட்டினார். தற்போதைய பெறுமதிக்கு ஏற்ப அவர்களுக்கு இழப்பீடு முதல்கட்டமாக வழங்கிய பின்னரே தற்போது தேவைப்படும் மேலதிக காணிகளுக்கான சுவீகரிப்பை ஆரம்பிக்கலாம் என்றும் ஆளுநர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் விமான நிலையத்தின் விரிவாக்கத்தின்போது இந்தப் பிராந்தியத்தைச் சேர்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்பு அதிகளவில் கிடைக்கும் என விமான நிலையம் மற்றும் விமான சேவைகளுக்கான நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

இதன்போது உள்ளூர் விமான சேவைகளை விரிவுபடுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டது. கொழும்பு – யாழ்ப்பாணம், மட்டக்களப்பு– யாழ்ப்பாணம் சேவைகளை முன்னெடுப்பதற்கு, பயணிகளின் தேவைப்பாடு தொடர்பான துல்லியமான தகவல்களை வழங்குமாறு விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தினர் கோரிக்கை விடுத்தனர்.

தற்போது சேவையை முன்னெடுக்கும் இண்டிகோ விமான சேவை நிறுவனம் சென்னை – யாழ்ப்பாணம் சேவைக்கு மேலதிகமாக பெங்களூர் – யாழ்ப்பாணம் சேவையை முன்னெடுப்பது தொடர்பாகவும் ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க இந்த மாத இறுதியில் யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளதாகவும் இதன்போது அபிவிருத்திக்கான நிதி மூலம் தொடர்பில் இறுதி செய்யலாம் என விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண பிரதம செயலர், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், தெல்லிப்பழை பிரதேச செயலர், இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பிராந்திய முகாமையாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## இலங்கை...

சிங்கப்பூர், மஸ்கட், ஓமான், துபாய் உள்ளிட்ட நாடுகளுக்கும் விமானங்கள் இயக்கப்படுகின்றன. உள்நாட்டு விமான சேவைகளாக சென்னை, பெங்களூர், ஹைதராபாத், மும்பை உள்ளிட்ட நகரங்களுக்கும் விமான சேவைகள் இயக்கப்படுகின்றது.

வெளிநாடுகளில் இருந்து திருச்சி விமான நிலையத்திற்கு இயக்கப்படும் விமானங்களில் அதிக அளவில் தங்கம் கடத்தப்பட்டு வருகிறது. இதனை தடுக்கும் வகையில் சுங்கத்துறை அதிகாரிகள் தொடர் சோதனை நடத்தி கடத்தல் தங்கத்தை பறிமுதல் செய்து வருகின்றனர். கடந்த சில நாட்களாக குறைந்திருந்த தங்கக் கடத்தல் மீண்டும் அதிகரித்துள்ளது.

கொழும்பிலிருந்து திருச்சி வந்த ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானத்தில் பயணிகள் அனைவரும் இறங்கிய பிறகு சுத்தம் செய்வதற்காக பணியாளர்கள் விமானத்தில் நுழைந்த போது கழிவறையில் கேட்பாரற்று பை ஒன்று கிடந்தது. இதுபற்றி சுங்கத்துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து விமானத்தின் உள்பகுதிக்கு வந்த சுங்கத்துறை அதிகாரிகள் கழிவறையில் கிடந்த பையை கைப்பற்றி சோதனை நடத்தினர். அப்போது அந்த பையினுள் 79 இலட்சம் இந்திய ரூபாய் மதிப்பிலான 985 கிராம் எடையுள்ள 2 தங்க கட்டிகள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதனை பறிமுதல் செய்த சுங்கத்துறை அதிகாரிகள் இதனை விமானத்தில் விட்டு சென்றவர்கள் யார்? அதிகாரிகளின் சோதனைக்கு பயந்து விட்டு சென்றனரா? என்பது குறித்து தொடர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். நீண்ட நாட்களுக்கு பிறகு திருச்சி விமான நிலையத்தில் கடந்த சில நாட்களில் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டதில் ஒரே நாளில் 985 கிராம் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் திருச்சி விமான நிலையத்திலிருந்து கொழும்பிற்கு ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானம் புறப்பட தயாராக இருந்தது. இந்த விமானத்தில் பயணிகளின் உடைமைகளை மத்திய வருவாய் நுண்ணறிவு பிரிவு அதிகாரிகள் சோதனை செய்த போது பயணி ஒருவர் உடமையில் மறைத்து வைத்திருந்த வெளிநாட்டு நாணயத்தாள்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அதன் இந்திய மதிப்பு 4,02,000 ரூபாய் என தெரிவிக்கப்பட்டது.

## பெயரில்...

ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா நேற்று (22) நீதிமன்றத்தில் முன்னிலையாகி, ஒரு மனுவை முன்வைத்திருந்தார்.

இது தொடர்புடைய வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, அநுராதபுரம் பொலிஸார் மூலம் சந்தேக நபரின் பெயர் "அர்ஜுனா லோச்சன்" என்று பெயரிடப்பட்டுள்ளது.எனினும், ஓட்டுநர் அனுமதிப் பத்திரத்தில் அவரது பெயர் இராமநாதன் அர்ச்சுனா என குறிப்பிடப்பட்டிருந்தது.

எனவே, சரியான சந்தேக நபரைக் கண்டுபிடித்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவின் சட்டத்தரணி தெரிவித்தார்.

அநுராதபுரத்தின் ரம்பேவ பகுதியில் நேற்று முன்தினம் (21) அதிகாலை போக்குவரத்து பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரிகள் குழுவுடன் நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா வாக்குவாதத்தில் ஈடுபட்டார். இதனையடுத்து போக்குவரத்து பொலிஸாரின் உத்தரவை மீறியதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா மீது பொலிஸார் விசாரணை நடத்தியதுடன் மோட்டார் போக்குவரத்துச் சட்டம் மற்றும் தண்டனைச் சட்டத்தின் கீழ் எம்.பிக்கு எதிராக பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

அதன்படி, இந்த விவகாரம் தொடர்பில் பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி நீதிமன்றத்தில் அறிக்கை அளிக்குமாறும் நீதிமன்றம் அநுராதபுரம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

## மல்வத்து ஓயாவின்...

காரணமாக நாச்சி யாதீவு , நுவர வாவி உள்ளிட்ட பிரதான குளங்களில் வழிந்து செல்லும் நீர் மற்றும் பல சிறிய குளங்களின் கசிவு நீர் என்பன மல்வத்துஓயாவில் சேர்ந்துள்ளது. இதனால் மல்வத்துஓயாவின் நீர் மட்டம் அதிகரித்துள்ளது.

மல்வத்துஓயாவின் நீர்மட்டம் வேகமாக அதிகரித்து வருவதாகவும் அதன் நீர் அநுராதபுரம் புனித நகரின் ஊடாக மற்றும் தந்திரிமலை ஊடாக மன்னாருக்கு வழிந்து செல்வதாகவும் நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

மல்வத்துஓயா நிரம்பி வழிவதால் அதன் தாழ்நிலப் பகுதியில் வசித்து வரும் மக்கள் அவதானத்துடன் இருக்குமாறும் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சட்ட...

இலங்கை ராமண்ய பீடத்தின் 74 ஆவது உப சம்பதா அரச நிகழ்வை நடத்துவது தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (22) நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை ராமண்ய பீடத்தினால் நடத்தப்படும் உபசம்பதா தேசிய நிகழ்வு 2025 ஜூன் 30 ஆம் திகதி முதல் ஜூலை 05 வரையில் விஜிதபுர, பமுகஸ்வெவ, புண்யவர்தனாராம விகாரையை மையப்படுத்தி உதுகக்கேபே சீமாமாலக்கயவில் நடத்தப்படவுள்ளது. 250கும் அதிகமான இளம் பிக்குகளுக்கான உபசம்பதா நிகழ்வு அரசாங்க அனுசரணையுடன் நடைபெற வுள்ளது.

இலங்கை ராமண்ய மகா பீடத்தில் இரு வருடங்களுக்கு ஒரு முறை நடத்தப்படும் உப சம்பதா நிகழ்வு ஒரு கௌரவ நிகழ்வாக அரசாங்கத்தினால் கருதப்படும் நிலையில் அதற்கு அவசியமான வசதிகளை தயக்கமின்றி செய்து கொடுக்குமாறு ஜனாதிபதி இதன்போது அதிகாரிகளுக்கு வலியுறுத்தினார்.

பௌத்த மத பாரம்பரியத்தை பாதுகாப்பதன் ஊடாக சமூக மலர்ச்சியை ஏற்படுத்தலாம் என்றும், இவ்வாறான மத நிகழ்வுகளை நடத்துவதன் மூலம் சமூகத்தின் மலர்ச்சியை மேலும் வலுப்படுத்தலாம் என்றும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இதன்போது தெரிவித்தார்.

# இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமிற்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் விஜயம்

## சமுதாய நலக்கூடம் கட்டித்தருவதாக உறுதி

சிவகங்கை மாவட்டம், ஒக்கூர் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று புதன்கிழமை (22) நேரில் சென்று ஆய்வு செய்தார். பின்னர் முகாம் வாழ் தமிழர்கள் தங்கள் பயன்பாட்டிற்காக ஒரு சமுதாய நலக்கூடம் கட்டித் தர வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். அவர்களது கோரிக்கையை உடனடியாக ஏற்று முதல்வர் முகாம்வாழ் இலங்கை தமிழர்களின் பயன்பாட்டிற்காக சமுதாய நலக்கூடம் கட்டித்தரப்படும் என்று முதல்வர் மு. க. ஸ்டாலின் உறுதி அளித்தார்.

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு பாதுகாப்பான, கௌரவமான, மேம்படுத்தப்பட்ட வாழ்க்கை அமைத்து தருவதை இந்த அரசு உறுதி செய்யும் என்று அறிவித்ததோடு, இலங்கை அகதிகள் முகாம் என்பதை இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் என்று பெயர் மாற்றம் செய்தார். முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்பட்டுவரும் மாதாந்திர பணக்கொடை, துணிமணிகள், பாத்திரங்கள், கல்வி உதவித் தொகை ஆகிய நலத்திட்டங்களை உயர்த்தப்பட்ட விகிதத்தில் வழங்கி வருவதோடு, இலவச சமையல் எரிவாயு இணைப்பு, அடுப்பு மற்றும் சமையல் எரிவாயு மானியம், மகளிர் சுய உதவி குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டு பயிற்சி போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சரின் தலைமையிலான அரசு முகாம்வாழ் இலங்கை தமிழர்களின் மேம்பாட்டிற்காக சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

ஒக்கூர் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் 227 குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இந்த முகாமில் முதற்கட்டமாக 90 வீடுகள் கட்டப்பட்டு கடந்த 17.9.2023 அன்று திறப்பு விழா நடைபெற்றது. நான்கு வீடுகள் கொண்ட தொகுப்பு வீடுகளுக்கு 20 லட்சம் ரூபாயும், ஒரு தனி வீட்டிற்கு 5.65 லட்சம் ரூபாயும் ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

தற்பொழுது மற்ற முகாம்தாரர்களும் புதிய வீடுகள் வேண்டும் என்று கோரிக்கை வைத்ததன்பேரில் வீடுகள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.இந்த ஆய்வின் போது, முதல்வர் மு. க. ஸ்டாலின் முகாம்வாழ் இலங்கை தமிழர்களிடம் முகாமில் செய்து தரப்பட்டுள்ள வசதிகள் குறித்து கேட்டறிந்ததோடு, முகாமிற்கு தேவைப்படும் அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து தரப்படும் என்றும் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# கிழக்கு மாகாண ஆளுநருடன் ஜப்பானிய தூதுவர் சந்திப்பு





(எஸ்.கீதபொன்கலன்)

இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் அகியோ இசோமட்டாவிற்கும் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்னசேகரவிற்கும் இடையிலான சந்திப்பு செவ்வாயன்று(21) திருகோணமலையில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்படும் ஜெய்க்கா மற்றும் யூ.என்.டீ.பி.திட்டங்களின் தளங்களை திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமை ஜப்பானிய தூதர் பார்வையிட்டார், மேலும் அங்கு பல சிறிய நீர்ப்பாசன திட்டங்களை ஆய்வு செய்ததாகவும் அவர் கூறினார். இலங்கை அரசாங்கத்தால் செயல்படுத்தப்படும் தூய்மை இலங்கை திட்டத்திற்கு தூதுவர் தனது பாராட்டுகளைத் தெரிவித்ததோடு, ஜப்பானிய அரசாங்கம் அதற்கு முழு ஆதரவையும் வழங்கும் என்றும் கூறினார். அதன்படி, அடுத்த இரண்டு வாரங்களுக்குள் இலங்கைக்கு 28 குப்பை சேகரிக்கும் ட்ரக் வண்டிகளை நன்கொடையாக வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவற்றில் 8 ட்ரக் வண்டிகள் கிழக்கு மாகாணத்திற்கு வழங்கப்படும் எனவும் தூதுவர் தெரிவித்தார். இலங்கை அரசாங்கம் தூய்மையான இலங்கை திட்டத்தின் கீழ் இலங்கையை ஒரு புதிய பாதையில் கொண்டு செல்வதற்கான மனப்பான்மை, சமூக மற்றும் சுற்றுச்சூழல் பணிகளில் ஈடுபட்டுள்ளதாகவும், கிழக்கு மாகாண சமூகங்களிடையே ஒற்றுமை மற்றும் அமைதியை மேம்படுத்துவதற்கும் உறுதிபூண்டுள்ளதாகவும் மாகாணத்தின் வளர்ச்சி, கல்வி, சுகாதாரம் மற்றும் சுற்றுலாத் துறைகளில் கவனம் செலுத்தி அவற்றை முன்னேற்ற பாதையில் கொண்டு செல்ல விரும்புவதாகவும் ஆளுநர் கூறினார்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் தை மாதம் 10ஆம் நாள் வியாழக்கிழமை

- **மேஷம்**: இன்று ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.
- **ரிஷபம்**: இன்று மிகுந்த ஆற்றலுடனும் உற்சாகத்துடனும் பணியாற்றுவீர்கள்.
- **மிதுனம்**: உங்கள் அணுகுமுறையில் பொறுமையும் உறுதியும் தேவை.
- **கடகம்**: இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக அமையும்.
- **சிம்மம்**: ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது.
- **கன்னி**: இன்று குளிர்ச்சியான உணவு வகைகளை தவிர்த்தல் வேண்டும்.
- **துலாம்**: உங்கள் தைரியம் மற்றும் உறுதி காரணமாய் வெற்றி கிடைக்கும்.
- **விருச்சிகம்**: இன்றைய நாள் முழுஅளவிலான அனுகூலத்தை அளிக்காது.
- **தனுசு**: இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும்.
- **மகரம்**: இன்று நீங்கள் மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள்.
- **கும்பம்**: இன்று அமைதியாகவும் பொறுமையாகவும் இருக்க வேண்டும்.
- **மீனம்**: இன்று யோகா அல்லது தியானம் மேற்கொள்வது சிறந்தது.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** இன்று மாலை 04:45 வரை ஷ நவமி பின்பு தசமி.
**நட்சத்திரம்:** இன்று முழுவதும் சுவாதி.
**யோகம்:** சித்த.
**சந்திராஷ்டமம்:** அஸ்வினி.
**சூலம்:** தெற்கு.
**இராகு காலம்:** 01:30 PM முதல் 03:00 PM வரை.
**குளிகை:** 09:00 AM முதல் 10:30 AM வரை.
**எமகண்டம்:** 06:00 AM முதல் 07:30 AM வரை.

# ஐக்கிய தேசியக் கட்சியுடனான முதல் கலந்துரையாடல் வெற்றி

## ரஞ்சித் மத்தும பண்டார தெரிவிப்பு

(கனுஷியா புஷ்பகுமார்)



ஐக்கிய தேசியக் கட்சியுடன் இடம்பெற்ற முதலாவது கலந்துரையாடல் வெற்றிகரமாக அமைந்திருந்ததாகவும் அதன்படி இரு கட்சிகளையும் இணைப்பதற்கான உடன்பாடு எட்டப்பட்டதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார். இரு கட்சிகளையும் இணைப்பது மற்றும் அதன் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் இந்த வாரத்தில் கலந்துரையாடப் படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இந்த கலந்துரையாடலுக்காக ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி அதன் பொதுச்செயலாளர் தலதா அத்துகோரள, ருவன் விஜேவர்தன, ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி அதன் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, திஸ்ஸ அத்தநாயக்க மற்றும் கபீர் ஹாஷீம் உள்ளிட்ட குழுவினர் கலந்துக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வாகனங்களின் விலை குறைக்கப்பட்டால் நிதி நிறுவனங்கள் நெருக்கடியைச் சந்திக்கும்

## ஜனாதிபதி

(கனுஷியா புஷ்பகுமார்)

எதிர்வரும் பெப்ரவரி மாதம் வாகன சந்தை மீண்டும் திறக்கப்பட்ட பின்னர் வாகன விலைகளை அதிகரிக்கும் என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

பிரதான ஊடகமொன்றின் அரசியல் கலந்துரையாடல் ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். முதல் மாதத்திலேயே டொலரின் மீதான அதிகப்படியான அழுத்தத்தைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார். நாட்டில் பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் தற்போதைய விலையை கருத்தில் கொள்ள வேண்டும் என கூறிய அவர், இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களின் விலை கணிசமாகக் குறைந்தாலோ அல்லது இடைவெளி குறைந்தாலோ, வங்கி அமைப்பு உள்ளிட்ட நிதி நிறுவனங்கள் நெருக்கடியைச் சந்திக்கும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். இந்த முறை வாகன இறக்குமதிக்கான வாகன வரிச் சலுகைகளுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது என்றும், எதிர்காலத்தில் அதிகாரசபை இதைப் பரிசீலிக்க வாய்ப்புள்ளதாகவும் அவர் கூறினார்.

## கிழக்கு மாகாண அரச சேவையில்

# 45 வயதைக் கடந்து நிரந்தரமாக்கப்பட்ட ஊழியர்களுக்கு ஓய்வூதிய உரிமை

## பிரதம செயலர் தெரிவிப்பு

(முகம்மட் முக்தார்)

கிழக்கு மாகாண அரச சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட 45 வயதுக்கு மேற்பட்ட அரச ஊழியர்களுக்கு ஓய்வூதிய உரிமைகளை வழங்குவதற்கான அமைச்சரவை பத்திரமொன்றின் மூலம் அனுமதியை பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகம் ஈடுபட்டுள்ளதாக கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர். எம்.எஸ்.ரட்ணாயக்க தெரிவித்தார்.

பொதுநிருவாக சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கமைய 45 வயதுக்குட்பட்டோருக்கு மட்டும் ஓய்வூதிய உரிமை வழங்கப்படும்.இந்த வயதை தாண்டியோருக்கு அமைச்சரவை அனுமதி அளித்தால் மாத்திரமே ஓய்வூதிய உரிமை உரித்தாகும்.

இவ்வாறான ஊழியர்களின் நீண்டகால சேவையை கருத்தில் கொண்டு கிழக்கு மாகாண ஆளுனரின் அறிவுறுத்தலுக்கமைய அமைச்சரவையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டு ஓய்வூதிய உரிமை பெற்றுக்கொடுக்கப்படுமென அவர் மேலும் தெரிவித்தார். கிழக்கு மாகாண அமைச்சுக்கள், திணைக்களங்களில் சுமார் 500 க்கு மேற்பட்டோர் 45 வயதை அடைந்த பின்னர் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டதன் காரணமாக தமக்கான ஓய்வூதிய உரிமைகளை இழந்துள்ளனர்.

கூடுதலான ஊழியர்கள் மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகள், தொண்டர் ஆசிரியர்களாக இருந்து சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட ஆசிரியர்கள் என பல்வேறு வகையானோர் இவ்வாறு ஓய்வூதிய உரிமைகளை இழந்துள்ளனர்.

# முன்னாள் நீதிபதி இளஞ்செழியனுக்கு அநீதி அரசாங்கம் மீது சிவில் சமூகம் குற்றச்சாட்டு!

(பு.கஜிந்தன்)

மேன்முறையீட்டு நீதிபதிக்கான தனது பதவி உயர்வு குறித்து அரசியலமைப்பு குழுவுக்கு விண்ணப்பித்தும் அது தொடர்பில் கண்டுகொள்ளாத அரசு முன்னாள் நீதிபதி இளஞ்செழியனுக்கு திட்டமிட்டு அநீதி இழைத்துள்ளதாக தீவக சிவில் சமூகம் குற்றம் சாட்டியுள்ளது.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் நேற்று (22) இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே குறித்த அமைப்பின் சார்பில் கலந்துகொண்ட கருணாகரன் நாவலன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் கனகரத்தினம் விந்தன் ஆகியோர் இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் கூறுகையில்,

இலங்கையின் சிறந்த நீதிபதிகளுள் ஒருவரும் தற்துணிவாக அச்சுறுத்தல்களுக்கு அடிபணியாது தீர்ப்புக்களை வழங்கி நீதியை எதிர்பார்த்த மக்களை ஆற்றுப்படுத்திய நீதிபதி இளஞ்செழியனுக்கு பாரபட்சமான




வகையில் இந்த அரசு பதவி உயர்வு வழங்காது பழிவாங்கியுள்ளது. இதை ஏற்க முடியாது. நீதிபதி இளஞ்செழியன் தனது 27 ஆண்டுகால நீதித்துறையின் பதவிக் காலத்தில் பல்வேறு தீர்ப்புகளை அச்சமின்றியும் பாரபட்சமின்றியும் வழங்கியதால் இலங்கை மக்கள் மத்தியில் நன்மதிப்பை பெற்றிருந்தார். ஆனால் அவருக்கான பதவிகள் அந்தந்த காலகட்டத்தில் வழங்கப்படாது அரசுகளால் திட்டமிட்ட வகையில் தட்டிக்கழிக்கப்பட்டு வந்தன.இதன் உச்சமாக தற்போது அநுர அரசும் தகுதிகள் அனைத்தும் இருந்து திட்டமிட்டு அவரது பதவி உயர்வை தடுத்து ஓய்வு நிலைக்கு தள்ள முயற்சித்துள்ளது. இதை எமது மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. அந்தவகையில் அரசு குறித்த பழிவாங்கலை கைவிட்டு அவரது பதவி உயர்வை வழங்க வேண்டும் என வலியுறுத்துகின்றோம்.இதேநேரம் அவ்வாறான சூழலை அரசு உருவாக்காது விட்டால் சிவில் சமூகங்கள் ஒன்றிணைந்து வீதிக்கு இறங்கி போராடும் நிலை வரும் எனவும் தெரிவித்தனர். இந்நிலையில் குறித்த சந்திப்பில் கலந்துகொண்ட முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் கனகரத்தினம் விந்தன் கூறுகையில் –

கடந்த காலங்களில் நாட்டுக்கும் தமிழ் மக்களுக்கும் ஜேவிபி செய்த செயற்பாடுகள் அனைத்தையும் எமது மக்கள் நன்கு அறிவார்கள். ஆட்சியை கைப்பற்ற அநுர தரப்பு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். இதையே மக்கள் எதிர்பார்க்கின்றனர். அத்துடன் தென்பகுதியைப் போன்று தமிழ் மக்களையும் உரிய தகுதிகளுக்கேற்ப நியமிக்க வேண்டும் என்றார்.

# ரணிலுக்கு நன்றி கூறினார் அநுர

(கனுஷியா புஷ்பகுமார்)

பதவிக்காலம் முடிவடைந்ததும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப்பட்டிருந்த அரசாங்க உத்தியோகபூர்வ இல்லத்தைப் பயன்படுத்தாமல் தனது சொந்த வீட்டிற்கு சென்றதற்காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நன்றி தெரிவித்தார்.

பிரதான தொலைக்காட்சி அலைவரிசையொன்றின் அரசியல் கலந்துரையாடல் ஒன்றில் கலந்துக்கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச உத்தியோகபூர்வ இல்லத்தை ஒப்படைத்ததாக தெரிவித்த ஜனாதிபதி, இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகளில், தற்போது மூன்று பேர் மாத்திரமே அரசாங்க உத்தியோகபூர்வ இல்லங்களைப் பயன்படுத்துவதாக தெரிவித்தார்.

தற்போது முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன மற்றும் சந்திரிகா குமாரதுங்க ஆகியோர் மாத்திரமே உத்தியோகபூர்வ இல்லங்களைப் பயன்படுத்துகின்றனர் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு தனக்கு உத்தியோகபூர்வ இல்லம் அல்லது பாதுகாப்புப் பணியாளர்கள் தேவையில்லை என்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இதன்போது தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

ஹேமா பிரேமதாச அரசாங்க உத்தியோகபூர்வ இல்லமொன்றில் இருந்தபோதிலும், இந்த பிரச்சினை பகிரங்கமானபோது அவர் வீட்டை ஒப்படைத்ததாகவும் கூறப்படுகிறது.

ஒருவனின் நோக்கில்...
No. 752/5, Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

## தமிழ் மொழி அமுலாக்கலையும் தூய்மைப்படுத்தல் வேண்டும்

அரசாங்கத்தின் கிளீன் ஸ்ரீலங்கா திட்டம். இது பற்றித்தான் இன்று நாடு பேசுகிறது.

இந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல், அரசாங்கம் ஆரம்பித்திருக்கின்ற மிகப்பெரிய தூய்மை திட்டமாக இதனை அறிவித்து செயல்படுத்த முன் வந்திருக்கிறது.

இது தொடர்பான, இரண்டு நாள் விவாதம் நாடாளுமன்றத்தில் நடந்து முடிந்திருக்கிறது. கடந்த 21 ஆம், 22 ஆம் திகதிகளில் நாடாளுமன்றம் பரபரப்பாக இருந்ததையே பார்க்க முடிந்தது. அரசாங்கத்தின் கிளீன் ஸ்ரீலங்கா திட்டம் தொடர்பான விவாதமாக இது இருந்தாலும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலரால், விவாதம் திசை திருப்பப்பட்டது.

நாட்டை தூய்மைப்படுத்துவதும், அரசியல் கலாசாரத்தை தூய் மைப்படுத்துவதும் இந்தத் திட்டத்தின் அடிப்படையான இலக்கு என நாடாளுமன்றத்தில் உரையாற்றிய பிரதமர் ஹரிணி அமரசூரிய தெளிவாக சுட்டிக்காட்டினார்.

விவாதத்தில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரில், திட்டம் பற்றிய தெளிவு இருந்ததாக தெரியவில்லை. சபையில் ஒதுக்கிய நேரத்தை அரசுக்கு எதிராக பயன்படுத்த வேண்டும் என்ற தொனியைத் தவிர, வேறு எதையும் அவர்களிடம் கருத்துக்களாக பெற முடியவில்லை. எதிர்க்கட்சி தரப்பிலிருந்து உரையாற்றிய ஒரு சில எம்பிக்கள், தெளிவான யோசனைகளை முன்வைத்து, கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தை முழுமையாக வரவேற்றனர். அதேநேரம், இந்தத் திட்டம் முறையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

தமிழ் பேசும் சமூகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்த கருத்துக்கள், அரசாங்கத்துக்கு பக்க பலமாக இருக்கும். அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டிருக்கும் ஒரு தேசிய திட்டம், அரசியலால் மந்த நிலைக்குச் சென்று விடக்கூடாது என்பதில் தமிழ் பேசும் எம்பிக்கள் இருக்கிறார்கள் என்பது தெட்டத் தெளிவாகியது. உண்மையில், தமிழ் பேசும் எம்பிக்களின் உரை அரசாங்கத்துக்கு காத்திரமான ஆலோசனைகளை வழங்கியதோடு, ஏனைய உறுப்பினர்களுக்கு முன்னுதாரணமாகவும் நடந்து கொண்டார்கள். நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மரபை இவர்கள் பேணி இருக்கிறார்கள் என்பது வரவேற்கக் கூடியது.

159 ஆசனங்களை பெற்று, தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் இருக்கிறது. மக்கள் ஆணை பெற்ற ஒரு அரசு என்பதில் மாற்றுக் கருத்துகள் இருக்க முடியாது. வெளிப்படையாக நாம் சொல்லப்போனால், மக்கள் மயப்படுத்தப்பட்ட ஒரு அரசு இது.

எந்த ஒரு திட்டமும் மக்களின் ஒத்துழைப்பு இல்லாமல் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டதாக வரலாறு இல்லை. நேர்த்தியான எந்த ஒரு திட்டமும் மக்கள் அங்கீகாரம் பெற்றே வந்திருக்கின்றன. சிங்களமும் தமிழும் இந்த நாட்டின் தேசிய மொழிகள். ஆட்சியில் இருந்து வந்த அரசாங்கங்களால் முறையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது அப்பட்டமான உண்மை. இந்த நிலை முதலில் தூய்மைப்படுத்தப்பட வேண்டும்.

இந்த விவாதத்தில் கலந்து கொண்டு, நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய தமிழரசு கட்சி பிரதிநிதி மருத்துவர் சத்தியலிங்கம் தெரிவித்த கருத்துக்கள் பாராட்டக்குரியவை. கிளீன் ஸ்ரீலங்காவை முழுமையாக ஆதரிப்பதாக தெரிவித்த அவர், ஆட்சியில் இருப்பவர்கள், "தூய்மைப்படுத்தல் திட்டத்தின் கீழ், தமிழை முதலில் முறையாக நடைமுறைப்படுத்த வேண்டும். " என்று தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

"இந்த விடயத்தில் நாம் அரசாங்கத்தை குற்றம் சாட்டவில்லை. என்றாலும், இந்த தேசிய திட்டத்தின் மூலம், மொழி தூய் மைப்படுத்தல் மிகவும் அவசியம்" என சத்தியலிங்கம் நோகாமல் தெரிவித்த கருத்து , அரசாங்க தரப்பை கொஞ்சம் உசுப்பேத்தி இருக்க வேண்டும்.

மொழி அமுலாக்கலிலே ஓரவஞ்சனை இருக்கிறது என்பதை , அமைச்சரும் சபை முதல் வருமான பிமல் ரத்நாயக்க, தெளிவுபடுத்த முற்பட்டார். கவனத்தில் எடுப்பதாகவும் கூறினார்.

திட்டங்களை அறிமுகப்படுத்துகின்ற பொழுது, இந்த நாட்டு மக்கள், முதலில் தெளிவடைய வேண்டும். சிங்களத்தில் மாத்திரம் திட்டங்களை தெளிவாக அறிவித்துவிட்டு, தேசியத் திட்டம் என்று கூறுவதில் அர்த்தம் இல்லை. வடக்கு - கிழக்கு மாகாணங்கள் உட்பட நாடு முழுவதும் தமிழ் பேசும் மக்கள் கணிசமான அளவு பரந்து வாழ்கின்றார்கள். புரியாத மொழியில் வெளியிடப்படும் நல்ல திட்டங்களை கூட அவர்கள் புரிந்து கொள்வதற்கு சந்தர்ப்பம் இல்லை.

"அஸ்வெசும, உறுமய, சமுர்த்தி.. போன்ற நல்ல திட்டங்களுக்கு சரியான தமிழ் வடிவங்கள் இன்னும் வெளியிடப்படவில்லை. ஆகவே திட்டங்களை அரசு அறிவிக்கின்ற பொழுது, தமிழ் பேசும் சமூகங்கள் புரிந்து தெளிவடையும் வகையில், மொழிபெயர்ப்புகளை அமல்படுத்தினால், ஆரோக்கியமான சூழ்நிலை உருவாகும்" என தமிழரசுக் கட்சி எம்.பி சத்தியலிங்கம் மிகவும் தெளிவாகக் கூறினார்.

கிளீன் ஸ்ரீலங்கா என்ற எண்ணக்கரு, சுற்றாடல் சுத்தம் செய்வதை மாத்திரம் குறிக்கவில்லை. நாட்டையும் தூய்மைப்படுத்தி அரசியலையும் தூய்மைப்படுத்துகின்ற முறைமை மாற்றத்தின் மறு வடிவமாகவே நாம் பார்க்க முடிகின்றது.

மாற்றம் ஒன்றை எதிர்பார்த்தே மக்கள் ஆணையைப் பெற்றது இந்த அரசு. ஆகவே, நாட்டையும் அரசியலையும் முழுமையாக தூய்மைப்படுத்துவதில் முறைமை மாற்றத்தை ஏற்படுத்தும் இலக்கில் அரசு வெற்றி பெற வேண்டுமாக இருந்தால், திட்டங்களை நடைமு றைப்படுத்துவதில் மாற்றம் தேவை.

# 'ஒரே இரவில் மாற்றங்களை கொண்டுவர முடியாது' கால அவகாசம் வேண்டும்

## புதிய அரசாங்கம் தொடர்பில் இன்னும் எதிர்ப்பார்ப்பு உண்டு விளக்கமளிக்கிறார்

## கலாநிதி முத்துகிருஷ்ணன் சர்வானந்தன்



தேர்தல் மேடைகளில் என்ன கூறியிருந்தாலும் கூட படிப்படியாக தான் மாற்றங்களை கொண்டுவர முடியும். மக்களின் மனோநிலையை மாற்றவும் புதிய அரசாங்கத்திற்கு சிறிது காலம் தேவை என பொருளியல் துறை கலாநிதி முத்துகிருஷ்ணன் சர்வானந்தன் தெரிவித்தார்.

எதிர்க்கட்சியில் இருக்கும் போது எந்த ஒரு அரசியல்வாதியும் எதை வேண்டுமானாலும் கூற முடியும். சரியோ, பிழையோ தேசிய மக்கள் சக்திக்கு நாம் ஒரு சந்தர்ப்பம் வழங்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

"ஒருவன்" செய்திச் சேவையின் "வாக்குறுதீ" அரசியல் நிகழ்வில் கலந்துக்கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்விடயத்தை தெரிவித்தார்.

ஐந்து ஆண்டுகளுக்கு பொறுப்பேற்ற அரசாங்கத்தில் வெறும் நூறு நாட்களில் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தாலும், தேசிய மக்கள் சக்தியினர் எதிர்க்கட்சியில் இருக்கும் போது அவ்வாறு மாற்ற முடியும் என்றே நாடாளுமன்றத்தில் வாதாடினார்கள். தற்போது அறுதிப் பெரும்பான்மையுடைய அரசாங்கம், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி. அநுரகுமார திஸாநாயக்க ஏன் நிலை தடுமாறுகிறார்? என எழுப்பப்பட்ட கேள்விக்கு விளக்கமளிக்கும் போதே அவர் இவ்வாறு சுட்டிக்காட்டினார்.

"தற்போது காணப்படுவது அனுபவமற்ற அரசாங்கம். 75 வருட காலமாக ஒரு கலாசாரத்தில் இருந்த அரச நிர்வாகிகளை இரவோடு இரவாக எழுப்ப முடியாது. 70ஆம் ஆண்டுகளில் இடதுசாரி அரசாங்கத்தின் போது கூட இந்த நிலை காணப்பட்டது. அரச அதிகாரியொருவர் தனது கடமையை சரியாக செய்யவிடின் அறுதிப் பெரும்பான்மையை வைத்து அவரை பதவி நீக்கம் செய்ய முடியாது. மக்களின் மனோநிலையை மாற்றவும் புதிய அரசாங்கத்திற்கு சிறிது காலம் தேவை" என அவர் விளக்கமளித்தார்.

மேலும் கேள்விகளுக்கு பதிலளித்த அவர்,

**01. கடந்த மூன்று ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் புதிய அரசாங்கத்தின் ஆட்சியில் நாட்டின் பொருளாதாரம் ஸ்திரமடைந்து விட்டதா?**

கடந்த ஐந்து ஆண்டுகளாக இலங்கை பொருளாதாரம் மிக பலவீனமாக காணப்பட்டதுடன் 2022ஆம் ஆண்டு திவால் நிலைக்குத் தள்ளப்பட்டது.2023ஆம் ஆண்டிலிருந்து படிப்படியாக வளர்ச்சி கண்டு, தற்போது கிடைக்கப்பட்டுள்ள புள்ளிவிபரங்களின்படி, இலங்கை பொருளாதாரம் ஒரு அளவு வளர்ச்சி கண்டுள்ளது. இவ்வாறாக ஒரு நாடு முதல் தடவையாக திவால் நிலைக்கு சென்றது. ஆகவே, அதன் மீட்சி படிப்டியாக தான் இருக்க வேண்டும். 2024ஆம் ஆண்டில் ஸ்திர நிலை ஏற்பட்டது. ஆட்சி மாற்றத்துடன் புதிய முகங்கள், ஊழல் எதிர்ப்பு போன்ற கொள்கைகளுடன் ஆட்சியமைத்துள்ள அரசாங்கம் பொருளாதாரத்தை மேலும் உத்வேகமாக முன்னெடுத்துச் செல்லும் என்ற எதிர்ப்பார்ப்பு மக்கள் மத்தியிலும் பொருளாதார நிபுணர்கள் மத்தியிலும் காணப்படுகிறது.

**02. கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் நாட்டின் பொருளாதாரத்துடன் எப்படி ஒன்றிணைகிறது?**

**தேர்தல் மேடைகளில் என்ன கூறியிருந்தாலும், ஆட்சிக்கு வந்த பின்னர் அதன் நடைமுறை அவர்களுக்கு புரியும்**

என்னைப் பொறுத்தவரையில் அது ஒரு முன்னோடியான நடவடிக்கை. உடனடியாக மாற்ற முடியாது. கிளீன் ஸ்ரீலங்கா என்ற முயற்சி கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளக் கூடியது. முன்னுரிமை வழங்குவது பாராட்டத்தக்கது. மக்களும் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, புரிந்து தங்களது பொறுப்புக்களையும், கடமைகளையும் செய்ய வேண்டும் . சிங்கப்பூர் போன்ற நாடுகளும் ஆரம்பத்தில் எங்களைப் போல தான் இருந்தார்கள், படிப்படியான முன்னேற்றம் தான் இன்று அவர்களை ஒரு சிறந்த நாடாக மாற்றியுள்ளது. ஒழுக்கமான சமூகமாக மாற்றியமைக்க சில வருடங்கள் தேவை. அதற்கான முயற்சியை ஆரம்பித்துள்ளார்கள் அதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

**03. இறக்குமதி பொருளாதாரத்தை வரவேற்க மாட்டோம் என்ற கொள்கையுடன் கூடிய அநுரகுமார திஸ ாநாயக்க அரசாங்கம் ஆட்சிக்கு வந்த நாளிலிருந்து நாட்டில் அரிசிக்கு தட்டுப்பாடு காணப்படுகிறது. கோட்டாபய ராஜபக்ச ஆட்சியில் நாடு வங்குரோத்தடைய வித்திட்டதும் இது தான். இந்நிலை தொடர்பில் உங்களுடைய அவதானம்?**

அரிசி இறக்குமதி இப்போது அல்ல சில மாதங்களுக்கு முன்னரே செய்திருக்க வேண்டியது எனினும் இரு தேர்தல்கள் போன்ற காரணங்களால் இது நடைபெறவில்லை. அனுபவம் இல்லாத அரசாங்கம். ஏற்றுமதி பொருளாதாரத்தை ஊக்குவிப்பதாக கூறியிருந்தார்கள். நாங்கள் ஏற்றுமதி செய்து விட்டு இறக்குமதியை நிறுத்த முடியாது. தேர்தல் மேடைகளில் என்ன கூறியிருந்தாலும், ஆட்சிக்கு வந்த பின்னர் அதன் நடைமுறை அவர்களுக்கு புரியும். அவர்களுடைய ஆலோசகர்களும் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதுதான் வாகன இறக்குமதியை தளர்த்தவும் காரணமாகும். இறக்குமதி, ஏற்றுமதி ஆகிய இரண்டும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள். ஆக இரண்டையும் நாம் சரியான முறையில் கையாள வேண்டும்.

**04. தேசிய மக்கள் சக்தி, ஜளம்ளப் எனப்படும் சர்வதேச நாணய நிதியத்துடனான விடயங்களை தனக்கான சாதனைகளாக பார்க்கிறது. ரணில் வழி பின்பற்றும் ஆட்சி என்ற விமர்சனங்களும் அரசாங்கம் மீது முன்வைக்கப்பட்டு வருகிறது?**

கோட்டாபய ராஜபக்ச ஆட்சி காலத்தில் தான் முதலாவதாக இந்த சர்வதேச நாணய நிதிய யோசனை கொண்டுவரப்பட்டது. சர்வதேச நாணய நிதியத்தின் இலக்குகளை அடைய பல்வேறு விதமான கொள்கைகளை கையாள முடியும். ரணில் அரசாங்கத்தில் அரச செலவீனத்தைக் குறைக்கவில்லை. வரிகளை அதிகரிப்பதன் மூலமே இலக்குகளை அடைந்தார்கள். ஊழலில் எந்தவித மாற்றமும் இருக்கவில்லை. அதுதான் அவர்களின் ஆட்சி வீழ்ச்சிக்கும் காரணமாக இருந்தது. எனினும், இந்த அரசாங்கத்திடம் புதிய கொள்கைகள் காணப்படுகின்றன. தேசிய மக்கள் சக்தியின் பொருளாதார அணுகுமுறைகள், திட்டங்கள் தொடர்பில் சரியான ஒரு பதிலை இப்போதே வழங்க முடியாது. எவ்வாறாயினும், நடைமுறைக்கேற்ற விடயங்களில் அவதானம் செலுத்தப்படும் என எதிர்ப்பார்க் கப்படுகிறது.





கனூஷியா புஷ்பகுமார்

# நெருக்கடிகளுக்கு மத்தியில் சேவை புரியும் சுகாதார திணைக்களம்

## வடக்கு மாகாண ஆளுநர் பாராட்டு!





**பு.கஜிந்தன்**

பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தம்மால் முடிந்தளவு சிறப்பான சேவையை மக்களுக்கு முன்னெடுத்து வருகின்றமைக்கு சுகாதார திணைக்களத்தினருக்கு பாராட்டுக்களைத் தெரிவித்த வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள், சுகாதார சேவையினரின் நியாயமான கோரிக்கைகளுக்கு முடியுமானவரையில் விரைவாக தீர்வுகளைப் பெற்றுத் தருவதாகத் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சுகாதார திணைக்களத்தின் கீழான மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், பொது மருத்துவமனைப் பணிப்பாளர்கள், ஆதார மருத்துவமனைப் பணிப்பாளர்கள் ஆகியோருக்கும் வடக்கு மாகாண ஆளுநருக்கும் இடையிலான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (21) இடம்பெற்றது.

முன்னைய ஆளுநரின் காலத்தில் ஒப்பந்த அடிப்படையிலான மருத்துவர்களுக்கு விண்ணப்பம்கோரி பெறப்பட்டபோதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் மிகப்பெரும் நெருக்கடி நிலைமைக்கு மத்தியிலேயே சேவைகளை முன்னெடுப்பதாகவும் மாவட்ட பொதுமருத்துவமனையில் போதுமான விடுதிகள் இல்லை என்பதையும் அவர் ஆளுநருக்கு எடுத்துரைத்தார்.

கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் மாவட்ட பொது மருத்துவமனையின் பணிப்பாளர் ஆகியோர் ஆளணிப் பற்றாக்குறை தொடர்பில் ஆளுநரின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

மருத்துவமனைப் பணியாளர்களுக்கான விடுதிப்பற்றாக்குறை தொடர்பிலும் சுட்டிக்காட்டினர். இதற்கு மாற்று ஒழுங்காக பளையில் அமைக்கப்பட்டுள்ள விடுதிகளைப் பயன்படுத்த மாகாண சுகாதரப் பணிப்பாளர் விடுத்த கோரிக்கைக்கு ஆளுநர் சாதகமான பதிலை வழங்கினார்.

மன்னார் மாவட்ட பொதுமருத்துவமனையின் பணிப்பாளர், மருத்துவமனைக்கு விடுதி வசதி அவசரமாகத் தேவைப்படுவதாகச் சுட்டிக்காட்டியதுடன் இது தொடர்பில் கடந்த காலங்களில் வாக்குறுதிகள் வழங்கப்பட்டிருந்தாலும் அவை நிறைவேற்றப்படவில்லை எனவும் ஆளுநருக்கு எடுத்துரைத்தார்.

மருத்துவமனைக்கு கணக்காளர் ஒருவரை உடனடியாக நியமிக்குமாறு பணிப்பாளர் முன்வைத்த கோரிக்கைக்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதம செயலாளரை ஆளுநர் பணித்தார். மன்னார் மாவட்ட மருத்துவமனையை கஷ்டப் பிரதேச மருத்துவமனை என்ற பிரிவுக்குள் இருந்து விடுவிக்குமாறும் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்தார்.

வவுனியா மாவட்ட பொதுமருத்துவமனைக்கும் ஆளணி தேவைப்பாடுகள் இருப்பதாக பணிப்பாளர் சுட்டிக்காட்டினார். மேலும் வவுனியா மாவட்டத்திலுள்ள 8 பிரதேச மருத்துவமனைகளுக்கு தாதிய வெற்றிடங்கள் உருவாக்கப்படவில்லை எனச் சுட்டிக்காட்டிய பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அதனை உருவாக்கித் தருமாறும் கோரிக்கை விடுத்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் தீவுப்பகுதிகளுக்கான அம்பியூலன்ஸ் படகின் தேவைப்பாடு மற்றும் சாரதிகளுக்கான தேவைப்பாடு அதிகம் இருப்பதாகத் தெரிவித்த பணிப்பாளர், சில சாரதிகள் முன்னறிவிப்பின்றி திடீரென பணியை விட்டு விலகுவதால் இந்த நெருக்கடி அதிகரித்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

சில மருத்துவமனைகளில் அம்பியூலனஸ் இருந்தாலும் சாரதிகள் இல்லாத நிலைமை இருப்பதாகத் தெரிவித்தார். ஒப்பந்த அடிப்படையில் அவர்களை உள்ளீர்ப்பது தொடர்பில் ஆராயுமாறு பிரதம செயலாளருக்கு ஆளுநர் பணிப்புரை வழங்கினார்.

மருந்து விநியோகிப்பதற்குரிய ஆளணிகளின் பற்றாக்குறை தொடர்பிலும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் குறிப்பிட்டனர்.

மருந்து விநியோகிப்பவர்களுக்கான பயிற்சிகள் 10 ஆண்டுகளுக்கு மேலாக வழங்கப்படவில்லை எனவும் அவர்கள் மேலும் சுட்டிக்காட்டினர்.

ஊர்காவற்றுறை மருத்துவமனைக்கு நோயாளர்கள் வருவதற்குரிய போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தித்தர வேண்டும் என்ற கோரிக்கை மருத்துவமனை பொறுப்பு மருத்துவ அதிகாரியால் சுட்டிக்காட்டப்பட்டது.

வடக்கில் ஆளணிப்பற்றாக்குறை நிலவும் நிலையில் சில மருத்துவமனைகளுக்கு நியமிக்கப்படும் மருத்துவர்களில் சிலர் முழுமையாக அங்கு பணியாற்றுவதில்லை எனவும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆளுநருக்கு தெரியப்படுத்தினார்.

4 மருத்துவர்கள் மருத்துவமனைக்கு நியமிக்கப்பட்டால் இருவர் மாத்திரம் ஒரு வாரம் கடமையிலிருப்பர் எனவும் எஞ்சிய இருவரும் விடுமுறையில் செல்கின்றனர் எனவும் குறிப்பிட்ட பணிப்பாளர், இதனால் கடமையிலிருப்பவர்கள் நெருக்கடியை எதிர்கொள்கின்றனர் எனவும் சுட்டிக்காட்டினார்.


மேலும், மருத்துவமனைகளுக்கான சுத்திகரிப்பு பணியாளர்கள், பாதுகாப்பு ஊழியர்களின் தேவைப்பாடுகள் தொடர்பிலும் ஆளுநரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. அதற்குரிய ஒழுங்குகளை பிரதம செயலர் ஊடாக முன்னெடுக்க ஆளுநர் ஆலோசனை வழங்கினார்.

மேலும், ஆகக் குறைந்த தேவைப்பாடுகளை முன்னுரிமைப்படுத்தி அடையாளப்படுத்துமாறு ஆளுநர் கோரிக்கை விடுத்ததுடன், வடக்கின் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒவ்வொரு மருத்துவமனைகளுக்கும் சென்று தேவைப்பாடுகள் தொடர்பில் ஆராயுமாறு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு பணிப்புரை விடுத்தார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், உதவிச் செயலாளர் ஆகியோரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சி மாவட்டத்தில் குடியிருப்பு பகுதியில் வெள்ளநீர் இரணைமடு குளத்தின் சகல வான்கதவுகளும் திறப்பு!





**(பு.கஜிந்தன்)**

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்ட சீரற்ற வானிலையால் மக்கள் இருப்பிடங்களிற்குள் வெள்ளநீர் உட்புகுந்ததுடன் உள்ளக போக்குவரத்துகளும் பாதிக்கப்பட்டது.

அதிகாலை பெய்த பலத்த மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டதுடன், பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதே வேளை இரணைமடு குளம் வான்பாய்ந்து வருவதுடன், குளத்தின் சகல வான்கதவுகளும் திறக்கப்பட்டுள்ளது. கனகாம்பிகைக்குளம், கல்மடுக்குளம் உள்ளிட்ட நீர்பாசனக் குளங்களும் வான்பாய்ந்து வருகிறது. இதனால் வெளியேறும் வெள்ள நீரும் மக்கள் குடியிருப்புக்கள், உள்ளக வீதிகளை கடந்து செல்கின்றது.

வெள்ளம் வடிந்தோடும் நிலையில் கண்டாவளை, கோரக்கன்கட்டு, முரசுமோட்டை, ஊரியான் உள்ளிட்ட தாழ்நிலப்பகுதியில் உள்ள மக்களை அவதானமாக செயற்படுமாறும், குளங்களை பார்வையிடும் மக்கள் அவதானமாக செயற்படுமாறும் இடர் முகாமைத்துவப் பிரிவு அறிவுறுத்தி வருகின்றது.

இதே வேளை குறித்த சீரற்ற வானிலையால் சரிந்து விழுந்த மற்றும் ஆபத்தான நிலையில் உள்ள மரங்களை பாதுகாப்பாக அகற்றி போக்குவரத்தை சீர் செய்யும் பணியில் அரச மரக்கூட்டுத்தாபனத்தினர் விரைந்து செயற்படுவதும் குறிப்பிடத்தக்கது.

# உலக வங்கிப் பிரதிநிதிகளுடன் வடக்கு மாகாண ஆளுநர் சந்திப்பு

வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தித் தேவைப்பாடுகள் தொடர்பில் உலக வங்கிப் பிரதிநிதிகளுக்கும், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் மற்றும் வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன் தலைமையிலான வடக்கு மாகாண அதிகாரிகளுக்கும் இடையில் சந்திப்பு நடைபெற்றது.

வடக்கு மாகாணத்துக்கு பயணம் மேற்கொண்டுள்ள உலக வங்கியின் நகர அபிவிருத்திக்கான மூத்த விசேட அதிகாரி போஹறம் ஷா தலைமையிலான குழுவினர் வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கான தேவைப்பாடுகள் தொடர்பில் ஆளுநரிடம் கேட்டறிந்து கொண்டனர். வடக்கில் அடையாளம் காணப்பட்டுள்ள திட்டங்களை முன்னெடுப்பதற்கான தேவைப்பாடுகள் தொடர்பிலும் உலக வங்கிப் பிரதிநிதிகளிடமும் ஆளுநரிடமும் தெரிவித்தனர்.

இதேவேளை வடக்கு மாகாண பிரதம செயலர் தலைமையிலான அதிகாரிகள் துறைசார் திட்டமுன்மொழிவுகளை உலக வங்கிப் பிரதிநிதிகளிடம் முன்வைத்தனர். வடக்கின் பிரதான வீதிகள், பாலங்கள், எரியூட்டிகள், துறைமுகங்கள் உள்ளிட்ட பல்வேறு தேவைப்பாடுகள் தொடர்பிலும் அவற்றை விரைவாக முன்னெடுப்பதன் தேவைப்பாடு தொடர்பாகவும் எடுத்துரைத்துள்ளனர். மேலும் திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது மாகாண சபையின் அமைச்சுக்கள், திணைக்களங்களையும் நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களாக உள்ளீர்க்க வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்தனர்.

# யாழ். தவறணையில் கள்ளு அருந்தியவர் மரணம்!

**(பு.கஜிந்தன்)**

இளவாலை தெற்கு பகுதியில் உள்ள கள்ளு தவணையில் கள்ளு அருந்தியவர் திடீரென உயிரிழந்துள்ளார். சங்குவேலி தெற்கு, மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த ஆறுமுகம் தங்கவேலு (வயது 64) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த நபர் கடந்த திங்கட்கிழமை (20) குறித்த தவறணையில் கள்ளினை குடித்தவேளை அந்த இடத்திலேயே உயிரிழந் துள்ளார். பின்னர் இளவாலை பொலிஸார் அவரது சடலத்தை மீட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் ஒப்படைத்தனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். மாரடைப்பு காரணமாக மரணம் சம்பவித் துள்ளதாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந் துள்ளது.

# யாழ் பல்கலை பொறியியல் பீடத்தின் "The nail" இதழ் இன்று வெளியீடு

**(பு.கஜிந்தன்)**




யாழ். பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் குடிசார் மற்றும் சுற்றாடல் சங்கத்தின் முயற்சியால் உருவான "The nail an engineer's digest" ஆணி இதழ் வெளியீடு இன்று (23) இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று (22) இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே ஏற்பாட்டுக் குழு குறித்த அறிவித்தலை வெளியிட்டது.

இது தொடர்பில் குறித்த குழு மேலும் தெரிவிக்கையில்,

2019இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் முயற்சியால் குறித்த ஆய்வு இதழ் வெளியிடப்பட ஏற்பாடுகள் நடைபெற்றன. ஆனால் அந்த முயற்சி கொவிட் தொற்றின் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது. இதையடுத்து முதலாவது இதழ் கடந்த 2023ஆம் ஆண்டு உலக விஞ்ஞானங்கள், திண்மக்கழிவு, தொழில் சார் முயற்சிகள் என பல்வேறு துறைசார் ஆய்வுகளை உள்ளடக்கி வெளியிடப்பட்டது.

இந்நிலையில் குறித்த இதழின் ஆக்கங்கள் தொடர்பில் பல்தரப்பினரது விமர்சனங்கள் ஆலோசனைகளுக்கு அமைய மூன்றாவது இதழ் பாடசாலை மாணவர்களையும் உள்வாங்கி அவர்களது ஆக்கங்களையும் உள்ளடக்கிய வகையில் வரவுள்ளது.

குறிப்பாக கணித எண் தொடர்பான கட்டுரைகள் புதிதாக பல்கலைக்கு செல்லும் மாணவர்களுக்கான ஆலோசனைகள் அடங்கியதாக வலம்வரவுள்ளது.

யாழ். பல்கலையில் இன்று (23) வெளியிடப்படவுள்ள இந்த இதழின் வெளியீட்டு நிகழ்வில் வடக்கின் ஆளுநர் வேதநாயகன் பிரதம அதிதியாகவும், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட பலர் சிறப்பு அதிதியாகவும் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு 10 சதவீத கழிவு

விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு 10 சதவீத கழிவு அறவிடப்படுவது இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து முழுமையாக நிறுத்தப்பட வேண்டும் என வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் விடுத்திருந்த பணிப்புரைக்கு அமைவாக யாழ்ப்பாண மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் 10.01.2025 அன்று ஆளுநருக்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளரால் வாய்மொழி மூலமாகவும், 15.01.2025 அன்று எழுத்துமூலமாகவும் தெரியப்படுத்தப்பட்டது.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பொ.ஸ்ரீவர்ணனால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிக்கையில்,

கடந்த காலங்களில் மத்திய அமைச்சர்களாலும் எமது மாகாண சபைக்கு உரித்தான முதலமைச்சராலும் காலத்துக்கு காலம் பதவியிலிருந்துள்ள கௌரவ ஆளுநர்களாலும் மற்றும் எமது திணைக்கள தலைவர்களாலும் இந்தப் பிரச்சினை தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இருந்த போதிலும் இப் பிரச்சினையை எம்மால் 100 சதவீதம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை. எமது திணைக்களம் சார்ந்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் சிலவற்றைக் குறிப்பிடுகிறேன்.

1. சந்தைகளை குத்தகைக்கு வழங்கும் போது சந்தைக் குத்தகை ஒப்பந்தங்களில் 10 சதவீதக் கழிவு அறவிடப்படமுடியாது என்ற இறுக்கமான வாசகங்கள் உட்படுத்தப்பட்டு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

2. சந்தைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள காட்சிப்பலகைகளிலும் வியாபாரிகளுக்கும், விவசாயிகளுக்கும் மற்றும் அனைவருக்குமே தெரியக்கூடியதாக இவ் 10 சதவீதக் கழிவு அறவிடப்படுவது சட்டமுரணானது என்பது தொடர்பாக தகுந்த காட்சிப்படுத்தல்கள் சந்தைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

3. உத்தியோகத்தர்கள் அடிக்கடி சந்தைகளுக்கு பயணம் மேற்கொண்டு மேற்பார்வை செய்கின்ற நடைமுறைகளும் இருந்து வந்துள்ளன. ஆயினும் இதனை எம்மால் 100வீதம் கட்டுப்படுத்துவதற்கு முடியவில்லை. மறைமுகமான முறையிலேயே முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதாவது பேரம் பேசலில் மிகவும் பலவீனமாகவுள்ள விவசாயிகளிடமிருந்து வர்த்தகர்களால் அநியாயமான முறையிலேயே இக் கழிவுகள் அறவிடப்படுகின்றன. இது தொடர்பாக பாதிக்கப்பட்ட விவசாயிகளோ அல்லது ஏனையோரோ துணிந்து இவ் விடயம் தொடர்பில் முறையிடுவதற்கும் தயங்குகின்றார்கள்.

ஏனெனில் மீண்டும் அதே சந்தையில் அதே வர்த்தகர்களை நாடிச் சென்றே விவசாயிகள் தமது பொருட்களை விற்க வேண்டிய நிலைமை இருப்பதால், வர்த்தகர்கள் தமது பொருட்களை புறக்கணித்து விடுவார்கள் என்ற அச்சத்தில் அவர்கள் எங்களுக்கு முறையிடுவதில்லை. இருப்பினும் சில முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற போது நாங்கள் அவற்றை ஆராய்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டும் உள்ளன. முறைப்பாடுகளை ஆராய்ந்து உறுதிப்படுத்துவதில் சிரமம் காணப்படுகின்றது. முறைப்பாடுகளை உறுதிப்படுத்தப்படும் பட்சத்திலேயே நடவடிக்கையை எம்மால் மேற்கொள்ள முடியும். நடவடிக்கை எடுப்பதற்குத் தேவையான ஆதாரங்களை சேகரிப்பதிலும் பல்வேறு சிரமங்கள் காணப்படுகின்றன.

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளராகிய நான், பல்வேறு சந்தைகளுக்கும் என்னுடைய உத்தியோகத்தர்கள் சகிதம் கண்காணிப்புப் பயணத்தை மேற்கொண்டிருந்தேன். வியாபாரிகள் சந்தைக்கு பொருட்களை அதிகாலை 3.30 தொடக்கம் எடுத்து வருவார்கள். அந்த நேரத்தில் எந்தவொரு முன்னறிவிப்பும் இல்லாமல் நாங்கள் சந்தைகளுக்குச் சென்று பார்வையிட்டோம்.

ஒன்று, இரண்டு வியாபாரிகள் இவ்வாறு நடந்து கொள்ளும் போது மறைமுகமாக அவதானித்து அவர்களைக் விசாரித்து கடுமையாக எச்சரிக்கை செய்தோம். அவர்களிடமிருந்து பணத்தையும் பெற்றுக் கொடுத்திருக்கின்றோம்.

குறிப்பாக மருதனார்மடம் சந்தையில் நான் உட்பட எமது குழுவினர் அங்கே சென்று கண்காணிப்பில் ஈடுபட்டபோது, விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்யமாட்டோம் எனத் தெரிவித்து 200இற்கும் அதிகமான வியாபாரிகள் எமக்கு எதிராகப் புறக்கணிப்புப் போராட்டத்தை நடத்தினர். இதனால் விவசாய உற்பத்திப் பொருட்களை சந்தைக்கு கொண்டு வந்த விவசாயிகளும், பொருட்களைக் கொள்வனவு செய்ய வந்த பொதுமக்களுக்கும் எமக்கு எதிராகச் செயற்பட்டனர்.

வியாபாரிகளுக்கு வழக்கமாக வழங்குவதைப்போல் தாம் 10 சதவீதக் கழிவுடன் பொருட்களைக் கொடுக்கின்றோம் எனத் தெரிவித்த விவசாயிகள் இதில் எம்மை தலையிட வேண்டாம் என்று கூறினர். வியாபாரிகள் எமது பொருட்களை வாங்காவிட்டால் அவை பழுதடைந்துவிடும் எனவும் தெரிவித்து எம்முடன் கடுமையான



தர்க்கத்தில் ஈடுபட்டனர். இதனால் நாம் அங்கிருந்து பின்வாங்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

விவசாயிகள் மிகவும் பலவீனமாக இருக்கின்றார்கள். விவசாய சங்கங்கள் அவர்களுடைய பிரச்சினைகளை அந்த இடத்திலேயே அணுகுவதற்கு தயாராக இல்லை. வர்த்தகர்கள் ஒற்றுமையாக செயற்படுவதனூடாக கழிவு விடயத்தை முன்னெடுத்து வருகின்றார்கள்.

அநேகமான விவசாயிகள் அதாவது 90 சதவீதத்துக்கு மேற்பட்ட விவசாயிகள், தங்களுடைய விவசாய உற்பத்திப் பொருட்களை வாடிக்கையாக ஒரு சில வர்த்தகர்களுக்கே வழங்கி வருகின்றார்கள். நேரடியாக கொண்டு வந்து சந்தையிலும் வழங்குகின்றார்கள். அநேகமான பொருட்கள் அவர்களுடைய தோட்டத்திலேயே வியாபாரிகளால் நேரடியாகச் சென்று கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது. எந்த விதமான பேரம் பேசலும் இன்றி வியாபாரிகளுக்கு விவசாயிகளின் உற்பத்திப் பொருட்கள் செல்கின்றன. இதைவிட, பெரும்பாலும் விவசாயிகள் வர்த்தகர்களிடம் கடன் வாங்கியே தோட்டம் செய்கின்றார்கள்.

இந்நிலையில் 10 சதவீதத்கும் குறைவான விவசாயிகள் இச்சந்தைகளுக்கு புதிதாக வந்து பேரம் பேசலின் மூலமாக விவசாய உற்பத்திப் பொருட்களை அவர்களுக்கு விற்க முனைவது ஏமாற்றத்தையே கொடுக்கின்றது. வர்த்தகர்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து, விவசாயிகள் அதிகமாகப் பேரம் பேசினால் அதை வாங்க மாட்டார்கள். தங்களுடைய நிபந்தனைகளுக்கு இணங்கி வராவிட்டால் விவசாயிகளிடம் வாங்காமலே புறக்கணித்து விடுவார்கள் என்ற அச்சத்தில் விவசாயிகளும் அவர்கள் கேட்கும் விலைக்கே கொடுத்து விட வேண்டிய நிலைமையே காணப்படுகின்றது.

இந்த நிலைமையை மாற்றுவதற்கு மீனவ சங்கங்கள் தங்களுடைய மீன் சந்தைகளை எவ்வாறு பரிபாலிக்கின்றார்களோ அதே நடைமுறை பின்பற்றப்படுவது சிறப்பாக அமையும். பிடிக்கப்படுகின்ற மீன்களைகட கடற்கரையில் அந்தச் சங்கத்தின் அனுமதியின்றி யாரும் எந்தவொரு வியாபாரிக்கோ அல்லது தனிப்பட்ட நபர்களுக்கோ கொடுத்து விட முடியாது. அவ்வாறு மீறி கொடுக்கும் பட்சத்தில் அவர்கள் அந்தச் சங்கத்தில் இருந்து நீக்கப்படுவார்கள். மீன் ஏலம் கூறல் ஊடாக மட்டுமே அதனை யாரும் பெற்றுக்கொள்ள முடியும் என்ற இறுக்கமான நடைமுறையை மீனவ சங்கங்கள் தமது கட்டுக்காப்பிலே வைத்து நடைமுறைப்படுத்துவதால் மீனவர்கள் பாதிக்கப்படாமல் தங்களுடைய பொருட்களுக்கு ஏலம் கூறல் மூலம் நியாயமான விலையைப் பெற்றுக்கொள்கின்றார்கள். ஆனால் விவசாயிகளுக்கு இவ்வாறான நிலைமையானது மரக்கறி சந்தைகளில் காணப்படவில்லை. இந்த விடயங்களை கையாளுவதற்கு விவசாய சங்கங்களும் முன்வருவதில்லை.

எமது உள்ளூராட்சி மன்றங்களுக்குச் சொந்தமான அனைத்து சந்தைகளிலும் பேரம்பேசலுக்குரிய அதாவது ஏலம் கூறலுக்கான இடம் எந்த விதமான கட்டணங்களும் இன்றி இலவசமாக வழங்குவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். அது மட்டுமன்றி அதற்கான தராசு, பற்றுச்சீட்டிடக்கூடிய கருவிகள், ஏனைய காகிதாதிகள் என்பவற்றை இலவசமாக வழங்குவதற்கும் தயாராக இருக்கின்றோம். இந்த விவசாய சம்மேளனங்கள் அல்லது விவசாய சங்கங்கள், தன்னிச்சையாக ஒரு சில வியாபாரிகளுக்கு வழக்கமாக எந்தவொரு பேரம் பேசலும் இன்றி மரக்கறிகளை கொடுப்பதனை தவிர்த்து, தங்களுடைய விவசாயிகளை ஒற்றுமைப்படுத்தி தங்களுடைய சங்க உறுப்பினர்கள் ஊடாக அவர்களுக்கு விழிப்புணர்வூட்டி அனைத்து மரக்கறிகளையும் பொதுவான ஏலம் கூறும் இடத்துக்கு கொண்டு வந்து ஏலம் கூறுகின்ற இறுக்கமான நடைமுறையைப் பின்பற்றினால், விவசாய உற்பத்திப் பொருட்களுக்கான கழிவுப் பிரச்சினை தானாகத் தீர்ந்து விடும்.

விவசாய சங்கங்கள், விவசாய சம்மேளனங்கள் முன்வந்து விவசாயிகளை ஒற்றுமைப்படுத்தி ஒருமுகமாக நியாயமான விலையைத் தீர்மானித்து எந்தக் கழிவுகளும் அறவிடாது விவசாயிகளிடமிருந்து பொருட்களை வர்த்தகர்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு முன்வருவதே, இவ் விடயத்தில் நீடித்து நிலைத்து நிற்கக்கூடிய தீர்வாக இருக்கும், என்று உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளரால் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை கவனத்திலெடுத்து சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருடன் வடக்கு மாகாண ஆளுநர் கலந்துரையாடல் நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.

# இலங்கையின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் சமூக நலத்திட்டங்கள்



(கே.எ.ஹமீட்)

சமூக நலன்புரி என்பது ஒழுங்கமைக்கப்பட்ட விதத்தில் கட்டமைக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் நோக்கத்தோடு வழங்கப்படும் சமூக சேவை ஆகும். அதாவது சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் அவர்களின் அடிப்படை தேவைகளான உணவு, உறையுள், கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு போன்றவற்றை பெற்றுக் கொடுத்தல் என்ற நோக்கத்தில் அரசாங்கம், தனியார் மற்றும் சமூக அமைப்புக்களின் மூலம் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் மற்றும் திட்டங்களை இது குறிக்கும். சமூக நலன்புரியானது நிபந்தனைகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட குழுவினருக்கே வழங்கப்படுகிறது. இது தேவையுடையோருக்கு குறிப்பிட்ட காலத்திற்கோ அல்லது தொடர்ச்சியானதாகவோ வழங்கப்படுகிறது.

இலங்கையில் நடைமுறையில் உள்ள சமூக நலன்புரித் திட்டங்கள் நாட்டு மக்களின் நல்வாழ்வை மேம்படுத்தவும் சமூக சமத்துவத்தை ஏற்படுத்தவும் வடிவமைக்கப்பட்ட அரசாங்கத் திட்டமாகும். இத்தகைய திட்டங்கள் குறிப்பாக ஏழை மக்கள், முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் போன்றோருக்கு உதவும் வகையில் கொடுக்கப்படுகிறது.

அந்த வகையில் இலங்கையில் மேற்கொள்ளப்படுகின்ற சமூக நலன்புரித் திட்டங்களான சமூர்த்தி திட்டம், இலவசக் கல்வி, இலவச மருத்துவம், அஸ்வெசும திட்டம், முதியோருக்கான ஓய்வூதிய திட்டம், மாற்றுத்திறனாளிகளுக்கான கொடுப்பனவு போன்றன பற்றிபார்க்கலாம்.

சமூர்த்தி திட்டமானது, சமூக நலன்புரி திட்டங்களில் முதன்மை பெறுகிறது. இது வறுமையை ஒழிக்கும் நோக்குடன் 1994ஆம் ஆண்டு அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் செயற்பட்டு வருகிறது. இதன் மூலம் ரன் பிரதீப தங்க நகை அடகு சேவை, அருநலு துரித கடன் வேலைத் திட்டம், புத்தாண்டு சேமிப்பு வேலைத் திட்டம், வாழ்வாதார அபிவிருத்தி வேலைத் திட்டம், சமூர்த்தி வீடமைப்பு வேலைத் திட்டம், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திட்டம் போன்றனவும் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதனை பெற்றுக் கொள்ளும் இலங்கை பிரஜை ஒருவரின் குடும்ப வருமானம், குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை, சொத்துக்கள், வேலை வாய்ப்பு நிலை போன்றன கருத்திற்கொள்ளப்பட்டு இது வழங்கப்படுகிறது.

இலவச கல்வி திட்டமானது 1945இல் C.W.W. கன்னங்கரா எனும் கல்வியாளரினால் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டது. இதனால் இலங்கையில் 16 வயதுக்குட்பட்ட சிறார்கள் ஆண், பெண் பேதமின்றி இலவச கல்வியை பெற்றுக் கொள்வது கட்டாயமாக்கப்பட்டதுடன், இலவச பாடநூல், சீருடை, இலவச உணவு என்பனவும் வழங்கப்படுகிறது. மேலும் உயர் தரத்தில் பல்கலைக்கழக வாய்ப்பை பெறும் மாணவர்களுக்கு மஹபொல, பேசரி போன்ற உதவித்தொகையும் வழங்கப்படுகிறது. இது அவர்களின் மேலதிக கல்வி தேவைகளுக்கு உதவியாக அமைகிறது. இதனைப் பெற்றுக் கொள்பவர் இலங்கை பிரஜையாக இருப்பதுடன், 6 வயதிலிருந்து இந்த இலவச கல்வியை பெற தகுதியுடையவராக காணப்படுகிறார்கள். இவ் இலவச கல்வித் திட்டத்தினால் அனைவருக்கும் சமனான கல்வி கிடைக்கப்பெறுகிறது. இது இலங்கையின் எழுத்தறிவு வீதம் உயர்வதற்கு காரணமாய் அமைந்துள்ளது.

இலவச மருத்துவ சேவை, இந்த சேவை 1934ஆம் ஆண்டு அப்போதிருந்த பிரதமர் மற்றும் சுகாதார அமைச்சர் ஆகியோரின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டது. இது இன, மத பேதங்களின்றி நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் தரமான சுகாதார சேவையை வழங்கும் நோக்குடன் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதனைப் பெற்றுக் கொள்ள எவ்வித வயதெல்லை கட்டுப்பாடுகளோ அல்லது வேறு நிபந்தனைகளோ இல்லை. இலங்கை பிரஜை ஒருவர் எந்நிலையிலும் உடல், உள நோய்களுக்கான சிகிச்சைகளை அரச வைத்தியசாலைகளில் பெற்றுக் கொள்ள தகுதியுடையவர் ஆவார். இந்த நலன்புரி திட்டத்தினால் இலங்கையில் இறப்பு வீதம் குறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அஸ்வெசும திட்டம், இது 2006ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டது. சுகாதார அமைச்சு மற்றும் சமூக நலவாய்ப்புத் துறையின் கீழ் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் உதவித்தொகை வறுமையில் வாழும் மக்களுக்கு அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய உதவுகிறது. இதனைப் பெற்றுக் கொள்வதற்கு வறுமை கோட்டிற்கு உட்பட்ட இலங்கை குடிமகன், கிராம அலுவலகம் அல்லது சமூக சேவை அலுவலகத்தில் பதிவு செய்திருப்பது அவசியம் ஆகும்.

முதியோருக்கான ஓய்வூதிய திட்டம், இந்த திட்டமானது வயதானவர்களுக்கு நிதி உதவி அளிக்கும் ஒரு முக்கியமான அரசாங்கத் திட்டமாகும். பெரும்பாலும் 60 வயதிற்கு மேற்பட்ட இலங்கை பிரஜை ஒருவர் இதனைப் பெற்றுக் கொள்ள தகுதி உடையவராக காணப்படுகிறார். இதன் போது அவரது குடும்ப வருமானம் கருத்திற் கொள்ளப்பட்டு இந்த உதவித்தொகை வழங்கப்படுகிறது. இலங்கை ஓய்வூதிய திணைக்களம் இதனை நிர்வகித்து வருகிறது.

மாற்றுத்திறனாளிகளுக்கான கொடுப்பனவு திட்டம், இலங்கையில் 1992ஆம் ஆண்டு அரசு மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது. மாற்றுத்திறனாளிகளுக்கு மாதாந்தம் உதவிகளை வழங்க உருவாக்கப்பட்டது. அவர்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் செயல்படுகிறது. இந்த கொடுப்பனவு திட்டம் சமூக நலத்துறை மற்றும் சுகாதார அமைச்சின் கீழ் செயற்படுகிறது. இதனை பெரும் நபரின் வயது, பொருளாதார நிலை என்பன ஆராயப்பட்டு வழங்கப்படும்.

இத்தகைய திட்டங்களின் செயற்பாட்டில் பல சவால்கள் இருப்பினும், இலங்கை அரசு இவ்வாறான சமூக நலன்புரித் திட்டங்கள் மூலம் சமூக சமத்துவத்தை ஏற்படுத்துவதோடு, தனிநபரின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதன் ஊடாக சமூக அபிவிருத்தியை ஏற்படுத்தும் தூர நோக்க எண்ணத்தோடு இதனை செயற்படுத்திவருகிறது.

# பெரும்போக அறுவடை ஆரம்பம்; அரிசி பற்றாக்குறை முடிவுக்கு வரும்




பெரும்போக அறுவடை தொடங்குவதால் அரிசி பற்றாக்குறை முடிவுக்கு வருமெனத் தெரிவித்த பிரதியமைச்சர் ஆர்.எம். ஜயவர்தன , அரிசியை மீண்டும் இறக்குமதி செய்வது குறித்து இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லையெனவும் தெரிவித்தார்.

இவ்வாறு வர்த்தகம், வணிகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு மேம்பாட்டு அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் கேட்டகேள்விக்கு பதிலளிக்கும் போதே தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவித்த பிரதியமைச்சர் ஆர். எம்.ஜயவர்தன , பல மாவட்டங்களில் நெல் அறுவடை ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அரிசி ஆலைகள் வைத்திருக்கும் நெல் கையிருப்புகளை சந்தைக்கு வெளியிட வணிகர்கள் நடவடிக்கை எடுத்து வருவதாக கூறினார்.

அரிசி இறக்குமதியை நாடுவதால், விவசாயிகள் கடுமையான நெருக்கடியை எதிர்கொள்வதாகவும் பெரும்போகத்தில் எதிர்பார்க்கப்படும் நெல் அறுவடை, 2.5 மில்லியன் மெட்ரிக் தொன் என்றும் அவர் தெரிவித்தார்.

# கொள்ளுப்பிட்டி ஜும்ஆ பள்ளிவாசலிலிருந்து 1000 ஆவது வார குத்பா நாளை

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தில் 2004 ஆம் ஆண்டு சுனாமியைத் தொடர்ந்து ஆரம்பித்த முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பான, கொழும்பு கொள்ளுப்பிட்டி ஜும்ஆ பள்ளிவாசலிலிருந்து நிகழ்த்தப்பட்ட குத்பா பிரசங்கங்களின் நேர்முக அஞ்சல் ஆரம்பிக்கப்பட்டு 1000 ஆவது வாரமாக குத்பா பிரசங்கம் நாளை வெள்ளிக்கிழமை நிகழ்த்தப்படவிருக்கிறது.

நாளை வெள்ளிக்கிழமை 24 ஆம் திகதி 1.05 முதல் 1000 ஆவது குத்பா பிரசங்கம் அஞ்சல் செய்யப்படவிருக்கிறது. இந்த குத்பா பிரசங்கம் 2004 ஆம் ஆண்டு அன்று முதல்முயைாக குத்பா நிகழ்த்திய அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா தலைவர் அஸ்ஸெய்க் எம்.ஐ.எம். ரிஸ்வி முப்தியினால் நிகழ்த்தப்படவிருக்கிறது. ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமைகளில் பகல் பிரதான செய்தியைத் தொடர்ந்து 1.05 முதல் கொள்ளுப்பிட்டி ஜும்ஆ பள்ளிவாசலிலிருந்து குத்பா பிரசங்கம் அஞ்சல் செய்யப்படுகிறது.

2004 ஆம் ஆண்டில் இந்த முஸ்லிம் சேவையை ஆரம்பித்து வைத்தவர் முஸ்லிம் சேவையின் அப்போதைய கட்டுப்பாட்டாளர், முஸ்லிம் சேவையின் பணிப்பாளராகவிருந்து ஓய்வுபெற்ற முஸ்லிம் சேவையின் ஆலோசனை சபை உறுப்பினராக இருந்த எம்.இஸட். அஹமட் முனவ்வர் என்பவராவார். அன்று முதல் இன்று வரை இந் நிகழ்வினை தயாரித்துவழங்குகிறார் எஸ்.முகமது றீஸா தொகுத்து வழங்குகிறார்.

# கூரிய ஆயுதத்தால் தாக்கி சகோதரர் கொலை

(ருத்ரா)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவின் பிறைந்துறைச்சேனையில் அண்ணன் ஒருவர் சகோதரரால் கூரிய ஆயுதமொன்றினால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளாக பொலிஸார் தெரிவித்தனர்.

சாதுலிய பாடசாலை வீதி வாழைச் சேனையைச் சேர்ந்த வயது (43) நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சகோதரர் (தம்பி) உயிரிழந்தவரின் வீட்டிற்கு சென்று பணம் தருமாறு கேட்டதாகவும் அதனை அவர் தருவதற்கு மறுப்பு தெரிவித்தபோது இடம்பெற்ற வாக்குவாதத்தினால் கோபம் கொண்டவர் அவரை கூரிய ஆயுதம் ஒன்றினால் தாக்கிவிட்டு தப்பி சென்றுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

தப்பி ஓடி தலைமறைவாகியுள்ளவரை கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

# நுரைச்சோலை-இலையந்தடி கடற்கரையில் மஞ்சள் மூடைகளுடன் சந்தேக நபர் கைது

(ரஸீன் ரஸ்மின்)



கற்பிட்டி – நுரைச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இலையந்தடி கடற்கரையோரத்தில் சட்டவிரோதமாக கொண்டு செல்வதற்கு தயாராக இருந்த ஒரு கொகை மஞ்சள் மூடைகளுடன் சந்தேகத்தின் பெயரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நுரைச்சோலை பொலிஸாரருக்கு நேற்றுமுன்தினம் (21) கிடைக்கப் பெற்ற இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில், இந்த சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, கடற்பிரதேசத்தில் இருந்து லொறியொன்றின் மூலம் கொண்டு செல்ல தயாராக இருந்த 51 மூடைகளில் அடைக்கப்பட்ட நிலையில் 2000 கிலோ கிராம் மஞ்சள் மீட்கப்பட்டுள்ளதுடன், சந்தேக த்தின் பெயரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள மஞ்சளின் பெறுமதி 1.2 மில்லியன் ரூபா என மதிப்பீடு செய்யபட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரையும், கைப்பற்றப்பட்டுள்ள மஞ்சளையும் புத்தளம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.இச் சம்பவம் தொடர்பில் நுரைச்சோலை பொலிஸார் விசாரனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஊடகவியலாளர்களுக்கான ஊடக செயலமர்வு 25 ஆம் திகதி

(அநுராதபுரம் எம்.ரீ.ஆரிப் )

இலங்கை பத்திரிகை பேரவையின் ஏற்பாட்டில் அநுராதபுரம் மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான ஊடக செயலமர்வு எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெவுள்ளது.

அதன்படி “சிறந்த சமூகத்தை கட்டியெழுப்புவதற்கான ஊடகவியலாளர்களின் வகிபாகம் ” என்ற தலைப்பில் இச்செயலமர்வை நடத்துவதற்கு இலங்கை பத்திரிகை பேரவை தீர்மானித்துள்ளது.

இதன் போது விரிவுரையாளர்களாக பேராசிரியர் டியூடர் வீரசிங்க மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர் அரியநந்த தொம்பகஹவத்த ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.

குறித்த செயலமர்வு அநுராதபுரம் ஜயந்தி மாவத்தையில் அமைந்துள்ள தேசிய பின் அறுவடை முகாமைத்துவ நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.




‘செழுமையான தேசம் அழகான வாழ்வு’ எனும் தூர நோக்கை அடையும் விதத்தில் ‘கிளீன் ஸ்ரீலங்கா’ செயற்றிட்டத்தின் கீழ் சாய்ந்தமருது – மாளிகைக்காடு ஜ/ம்ஆ பெரிய பள்ளிவாசலில சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. (படம் : எம்.எஸ்.எம்.ஸாகிர்)

# மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்திற்கு மின்னொளி

(ஏ.எல்.எம். ஷினாஸ்)

மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்திற்கு 16 மில்லியன் ரூபா செலவில் மின்னொளி பொருத்தும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறித்த மைதானத்திற்கு நவீன மின்னொளியை பொருத்தித் தருமாறு பிரதேசத்தில் உள்ள விளையாட்டு கழகங்கள், சமூக அமைப்புக்கள், சங்கங்கள், கழகங்களின் பிரதிநிதிகள் என பலரும் நீண்ட காலமாக பிராந்திய அரசியல் தலைவர்களிடத்தில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வந்தனர்.

இந்நிலையில் குறித்த மைதானத்திற்கு மின்னொளி பொருத்துவதற்கு என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் முதுநபீன் 2 மில்லியன் ரூபாய் நிதியினை முதல் கட்டமாக ஒதுக்கீடு செய்திருந்தார். பின்னர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் 14 மில்லியன் ரூபா நிதியினை குறித்த மைதானத்தில் மின்னொளி பொருத்தி நவீன மைதானமாக புனரமைப்பு செய்வதற்கு என ஒதுக்கீடு செய்திருந்தார்.



இந்த வேலை திட்டத்தை கல்முனை பிரதேச செயலகம், கல்முனை மாநகர சபை முன்னெடுத்தன. இவர்களின் அனுமதிக்கு அமைய தனியார் நிறுவனம் ஒன்றுக்கு பொறுப்பளிக்கப்பட்டு தற்போது அதி நவீன மின்னொளி பொருத்தும் நடவடிக்கைகள் மைதானத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# ஏ.எம். தாஜ்ஜின் சகோதரி காலமானார்

அக்கரைப்பற்று -03 யைச் சேர்ந்த ரபீலா ஆசிரியை நேற்று கொழும்பில் காலமானார்.இவர் சட்டத்தரணி ஏ.எம். தாஜ்ஜின் (ஒலிபரப்பாளர்-இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்) சகோதரியாவார்.

அன்னார் வை.பி. நிசாரின் கணக்காய்வு அத்தியட்சகர் மனைவியாவார். இவர், மர்ஹூம்களான அச்சி முகம்மட், சபுறா உம்மா ஆகியோரின் மகளும், மர்ஹூம் அஹமட்லெவ்வை (முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர்), முகம்மட் இப்றாஹீம் (முன்னாள் சதொச நிறுவனத்தின் பிரதி பொது முகாமையாளர்), சரீனா ஆசிரியையின் சகோதரியுமாவார். பாத்திமா சாறா, அத்திப் அஹமட் ஆகியோரின் தாயாருமாவார்.

# மரத்தில் ஏறிய மாணவன் மின்சாரம் தாக்கி மரணம்

(அநுராதபுரம் எம்.ரீ.ஆரிப் )

ஹூரிகஸ்வெவ பொலிஸ் பகுதிக்குட்பட்ட மகுலேவ சுதர்சனகம பிரதேசத்தில் அயலவர் வீட்டிலுள்ள பலா மரத்தின் கிளைகளை வெட்டுவதற்காக மரத்தில் ஏறிய பாடசாலை மாணவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

மகுலேவ தேசிய பாடசாலையில் தரம் 10 ல் கல்வி கற்று வரும் இந்துசர விஜேரத்ன என்ற சுதர்சனகம மகுலேவ பகுதியைச் சேர்ந்த மாணவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

ஐந்து பிள்ளைகள் கொண்ட குடும்பத்தில் மூத்த பிள்ளையான இவர் (21) பிற்பகல் தனது பாட்டி மற்றும் தனது சகோதரருடன் பக்கத்து வீட்டில் உள்ள பாரிய பலா மரத்தின் கிளைகளை வெட்டச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் வெட்டப்பட்ட பலாமரக் கிளை பிரதான வீதியில் உள்ள மின் கம்பியில் சிக்கியதில் மின்சாரம் பாய்ந்து இவர் மரத்தில் இருந்து கீழே விழுந்துள்ளார். உடனடியாக தம்புத்தேகம ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் மாணவன் உயிரிழந்திருந்ததாக வைத்தியசாலையில் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹூரிகஸ்வெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

# உள்ளூராட்சி மன்ற தேர்தல் கொழும்பில் மு.கா தனித்துப்போட்டி



(கே எ ஹமீட்)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மரச் சின்னத்தில் தனித்துப் போட்டியிடுவதற்கு என்று நேற்றுமுன்தினம் மாலை, ”தாருஸ லாம்” தலைமையகத்தில் நடைபெற்ற கட்சியின் கொழும்பு மாவட்ட மத்திய குழுக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது .

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர்களான கட்சியின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் , எம்.எஸ் .உதுமாலெப்பை, எம்.எஸ்.நழீம் மற்றும் கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளர், மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் அர்ஷாத் நிஸாம்தீன் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் நடைபெற்ற பிரஸ்தாப கொழும்பு மாவட்ட மத்திய குழு கூட்டத்தில் தற்போதைய அரசியல் சூழ்நிலையை மையப்படுத்தி நீண்ட நேரமாக கலந்துரையாடப்பட்டதன் பின்னர், கொழும்பு , தெஹிவலை-கல்கிஸ்ஸ, கோட்டே ,மொரட்டுவை,கொலன்னாவ மாநகர சபைகளுக்கும்,கொடிகாவத்தை-முல்லேரியா போன்ற பிரதேச சபைகளுக்கும் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுவதென்ற முடிவை தலைவர் அறிவித்ததோடு அடுத்த கட்ட நடவடிக்கைகளை கட்சி உடனடியாக ஆரம்பிக்கவுள்ளதாகவும் அறிவித்தார்.

# சேனகமவில் 20வது நீர் திட்டம் திறந்து வைப்பு





மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் சமூகம் எதிர்கொள்ளும் நீர் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் தியசரண திட்டத்தின் மூலம் சன்ஷைன் ஹோல்டிங்ஸின் கார்ப்பரேட் சமூகப் பொறுப்பு பிரிவான சன்ஷைன் ஃ பவுண்டேஷன் ஆரம்பித்தது.

நாவுலவில் உள்ள சேனகம, கிராமத்தில் இந்த நீர் சுத்திகரிப்பு அலகு அண்மையில் திறக்கப்பட்டது. இந்தத் திட்டம் கிராமத்தில் வசிக்கும் 2000க்கும் மேற்பட்ட மக்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதையும் நீரினால் பரவும் நோய்களைக் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

20வது புரோ ப்லான்ட்ஐ திறந்து வைத்துப் பேசிய சன்ஷைன் ஹோல்டிங்ஸ் நிறுவன தொடர்பு மற்றும் சமூகப் பொறுப்பு முகாமையாளர் லாலன்தி ராஜபக்ஷ கூறியதாவது,

“இலங்கையின் பல பகுதிகளிலிருந்தும் நாள்பட்ட சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாகவுள்ளன. இதனால், பாதுகாப்பான குடிநீரின் அவசியம் தெளிவாகக் காட்டுகிறது. இத்தகைய சூழலில், சேனகமவில் நாங்கள் திறந்த நீர் சுத்திகரிப்பு அலகு (புரோ ப்லான்ட்) வெறும் நீர் சுத்திகரிப்பு முறைக்கு அப்பால் முக்கிய பங்கு வகிக்கிறது.

ஆரோக்கியமான வாழ்க்கை முறை மற்றும் சமூகத்திற்கு சுத்தமான குடிநீர் கிடைப்பதை நோக்கிய ஒரு முக்கியமான படியாக இது கருதப்படலாம். “நாங்கள் நிறுவும் ஒவ்வொரு நீர் சுத்திகரிப்பு அலகும் ஆயிரக்கணக்கான உயிர்களை நீரினால் பரவும் நோய்களிலிருந்து பாதுகாக்கிறது.“ என தெரிவித்தார்.

2019 ஆம் ஆண்டில் நாள்பட்ட சிறுநீரக நோயை ஒழிப்பதற்காக சன்ஷைன் அறக்கட்டளையால் எடுக்கப்பட்ட ஒரு முக்கியமான படியாக தியசரண திட்டம் உள்ளது.

கதிர்காமத்தில் தனது முதல் நீர் சுத்திகரிப்பு அலகை நிறுவிய பிறகு சன்ஷைன் ஃபவுண்டேஷன் ஃபார் குட், நாடு முழுவதும் 20 நீர் சுத்திகரிப்பு அலகுகளை (புரோ ப்லான்ட்)வெற்றிகரமாக நிறுவியுள்ளது.

'Better Water, Better Life' என்ற அவர்களின் தூர நோக்கு திட்டத்தை மேலும் மேம்படுத்துகிறது. "Clean Water and Sanitation" குறித்த ஐக்கிய நாடுகளின் நிலையான வளர்ச்சி இலக்கு (UN SDG 4) உடன் மேலும் இணைந்து அனைவருக்கும் பாதுகாப்பான மற்றும் மலிவு விலையில் குடிநீருக்கான நியாயமான மற்றும் சமமான அணுகலை உறுதி செய்வதில் உறுதிபூண்டுள்ளது.

சன்ஷைன் ஹோல்டிங்ஸின் 50வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் ஆரம்பிக்கப்பட்ட சன்ஷைன் ஃபவுண்டேஷன் ஃபார் குட்இ குழுமத்திற்குள் உள்ள அனைத்து நிறுவனங்களின் சமூகப் பொறுப்புத் திட்டங்களையும் ஒன்றிணைத்து ஊழியர்கள் பங்குதாரர்கள் மற்றும் சமூகங்களை மேம்படுத்தும் ஒரே இலக்கின் கீழ் சுகாதாரம் மற்றும் கல்வி ஆகிய இரண்டு முக்கிய துறைகளில் கவனம் செலுத்துகிறது.

# பொத்துவில் பிரதேச பாடசாலைகளில் வடியாத வெள்ளம்



(திகாமடுல்ல நிருபர்)

அக்கரைப்பற்று கல்வி வலயத்துக்குட்பட்ட பொத்துவில் பிரதேசத்தில் ஒரு சில பாடசாலைகளில் வெள்ள நீர் நிரம்பி காணப்படுவதால் மாணவர்களும், ஆசிரியர்களும் பல வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்த சில தினங்களாக பெய்துவரும் அடைமழை மற்றும் குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டமையினால் மேற்படி பாடசாலைகள் நீரில் மூழ்கியுள்ளன.

நீரில் மூழ்கியுள்ள பாசாலைகளை பொத்துவில் பிரதேச கோட்டககல்விப் பணிப்பாளர் கே. ஹம்ஸா நேரடியாக களத்திற்குச் சென்று பார்வையிட்டதுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் பாதிப்பு தொடர்பிலான விடயங்களையும் தெரிவித்தார்.

# திருமலை மாவட்டத்தில்

## 24 வீடுகள் சேதம்; 691 பேர் பாதிப்பு



(அபு அலா)

கடந்த சில நாட்களாக நாட்டில் நிலவுகின்ற சீரற்ற காலநிலையால் திருகோணமலை மாவட்டத்திலுள்ள ஏழு பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த மூதூர், குச்சவெளி, சேருவில, கோமரங்கடவல, மொறவெவ, தம்பலகாமம் மற்றும் கிண்ணியா ஆகிய பிரதேச செயலகப் பிரவுகளில் 208 குடும்பங்களைச் சேர்ந்த 691 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேவேளை, 24 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக திருகோணமலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதிப் பணிப் பாளர் குகதாஸ் சுகுணதாஸ் தெரிவித்தார்.

அந்த வகையில் திருகோணமலை மாவட்டத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக (21) பெறப்பட்ட புள்ளி விபரத் தகவலின்படி மூதூர் பிரதேச செயலகப் பிரிவில் 15 குடும்பங்களைச் சேர்ந்த 61 பேரும், குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 8 பேரும், சேருவில பிரதேச செயலகப் பிரிவில் 35 குடும்பங்களைச் சேர்ந்த 127 பேரும், கோமரங்கடவல பிரதேச செயலகப் பிரிவில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 13 பேரும், மொறவெவ பிரதேச செயலகப் பிரிவில் 54 குடும்பங்களைச் சேர்ந்த 216 பேரும், தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் 93 குடும்பங்களைச் சேர்ந்த 260 பேரும், கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவில் 2 குடும்பங்களைச் சேர்ந்த 6 பேரும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், மூதூர் பிரதேச செயலகப் பிரிவில் 15 வீடுகளும், சேருவில பிரதேச செயலகப் பிரிவில் 5 வீடுகளும், மொறவெவ பிரதேச செயலகப் பிரிவில் 2 வீடுகளும், கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவில் 2 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# புகையிரதத்தில் மோதியவர் வைத்தியசாலையில் அனுமதி

(எச்.எம்.எம்.பர்ஸான்)

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்த புகையிரத வண்டி ஓட்டமாவடி பகுதியால் செல்லும் போது, நபரொருவர் புகையிரத பாதையை கடக்கும் சந்தர்ப்பத்தில் புகையிர வண்டியில் மோதி காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று (22) புதன்கிழமை காலை ஓட்டமாவடி பகுதியில் இடம்பெற்றுள்ளது.இதில், காயமடைந்தவர் வாழைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

காயமடைந்த நபர் சிகிச்சைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பாடசாலை மாணவிகளுக்கு பிரத்தியேக பஸ் சேவை ஆரம்பம்

இலங்கை போக்கு வரத்து சபையின் மட்டக்களப்பு டிப்போ, மகளிருக்கான பஸ் சேவையை நேற்று முதல் ஆரம்பித்துள்ளது.

பாடசாலை செல்லும் மாணவிகள் பஸ்களில் செல்லும் போது இடம்பெறுகின்ற பாலியல் தொல்லைகள் தொடர்பாக மட்டக்களப்பு அருவி பெண்கள் வலையமைப்புக்கு செய்யப்பட்ட முறைப் பாட்டுக்கு அமையவே இச்சேவை ஆரம்பிக்கப்பட்டது.

மட்டக்களப்பு அருவி பெண்கள் வலையமைப்பின் பணிப்பாளரும் சட்டத்தரணியுமான மயூரி ஜனன், இலங்கை போக்குவரத்து சபையின் மட்டக்களப்பு வீதி அத்தியட்சகர் கந்தசாமி சிறிதரனின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

கல்முனை தலைமை காரியாலய பிரதான பிராந்திய முகாமையாளர் விஜித்த தர்மசேனவின் அனுமதியுடன் இலங்கை போக்குவரத்து சபையின் மட்டக்களப்பு டிப்போ பாடசாலை பெண் மாணவிகள் மற்றும் பாடசாலை ஆசிரியர்களுக்கு முதல் முறையாக பாதுகாப்பான போக்குவரத்து வழங்கும் பிரத்தியேக பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் மட்டக்களப்பு சத்துருக் கொண்டான் பிரதேசத்தில் காலை 06.15இற்கு ஆரம்பிக் கப்படுகின்ற பாடசாலை பெண் மாணவிகளுக்கான பஸ் அருனோதயா, கோட்டமுனை கனிஷ்ட வித்தியாலயம், மகாஜனா, சிசிலியா, ஆனைப்பந்தி, வின்சன்ட் உள்ளிட்ட பாடசாலைகள் முன்பாக பயனிக் கின்றமை குறிப்பிடத்தக்கது.




# வாழைச்சேனை நஹ்ஜா மாணவன் இல்ஹாம் தேசியத்தில் முதலிடம்




(எச்.எம்.எம்.பர்ஸான்)

தேசிய ரீதியாக நடைபெற்ற அல் குர்ஆன் மனனப் போட்டியில் வாழைச் சேனை நஹ்ஜா அரபுக் கல்லூரி மாண வன் இல்ஹாம் தேசியத்தில் முதலிடம் பெற்றுள்ளதாக கல்லூரியின் அதிபர் அஷ்ஷெய்க் எம்.ஏ.எம். ரஹ்மதுல்லாஹ் (அல்பலாஹி, அல்அதிரமீ) தெரிவித்தார்.

சவூதி அரேபியா அனுசரணையுடன் முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இம்மாதம் 18ஆம் திகதி தேசிய ரீதியில் நடாத்திய அல் குர்ஆன் மனனப் போட்டியில் 500இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

அதில், மூன்றாம் பிரிவு 05 ஜுஸ்உவில் மாணவன் இல்ஹாம் முதலிடம் பெற்று கல்லூரிக்கும் பிரதேசத்திற்கும் பெருமை தேடித்தந்துள்ளார்.

இவர், மஸ்ஜிதுல் ஹுதா வீதி பிறைந்துரைச்சேனையில் வசிக்கும் எம்.எல்.எம்.இல்யாஸ், எஸ்.ஐ.கதீஜா தம்பதிகளின் புதல்வராவார்.

# பொதுமக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு: திருமலை மாவட்ட செயலகத்தில் 'மக்கள் தினம்'



(எஸ்.கீதபொன்கலன்)

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்ணசேகர பொதுமக்களின் பிரச்சனைகளுக்கான தீர்வுச் செயல்முறையை விரைவுபடுத்தும் நோக்கில், திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் (21) மக்கள் தினத்தை நடாத்தினார்.

இந்நிகழ்வில், கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ். ரத்நாயக்க, திருகோணமலை மாவட்டச் செயலாளர் டபிள்யூ. ஜி.எம். ஹேமந்த குமார, கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் ஜே.எஸ். அருள்ராஜ், பிரதேச செயலாளர்கள், பிரதேச சபைச் செயலாளர்கள் மற்றும் பிற பொறுப் பான நிறுவனங்களின் தலைவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பொதுமக்கள் தங்கள் பிரச்சினைகளை பொறுப்பான அதிகாரிகளிடம் தெரிவிக்க வாய்ப்பு வழங்கப்பட்ட அதே வேளை ஆளுநர், பிரதம செயலாளர் மற்றும் மாவட்டச் செய லாளர் ஆகியோரிடமும் தங்கள் பிரச்சினைகளை முன்வைக்க வாய்ப்புகள் வழங்கப்பட்டன.

# ஸ்ரீ சித்திரவேலாயுதப் பெருமான் ஆலயத்தில் சங்காபிஷேகம்

(துஷாரா, அபு அலா)

மட்டக்களப்பு – தாண்டியூர் ஸ்ரீ சித்திரவேலாயுதப் பெருமான் ஆலயத்தின் மஹா 1008 சங்காபிஷேகமும் பாற்குட பவனியும் நாளை 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

நவமி திதியும் அனுச நட்சத்திரமும் கூடிய காலை 8.00 – 12.00 வரையுள்ள சுபநேரத்தில் தமிழ் மாதம் தை 11ஆம் திகதி எம்பெருமானுக்கு 4ஆவது 1008 மஹா சங்காபிஷேகமும், பாற்குட பவனியும் இடம்பெறவுள்ளன.

கரையாக்கன்தீவு அருள்மிகு ஸ்ரீ கருமாரியம்மன் ஆலயத்தில் இருந்து காலை 8.00 மணியளவில் பாற்குடப் பவனி எடுத்துவரப்படும் என்றும் பாற்குடம் எடுக்க விரும்பும் அடியார்களும், பெருமானிற்கு உபயம் பண்ண விரும்புவோரும் தங்களது பெயர் விபரங்களை முன்கூட்டியே ஆலய பரிபாலன சபையினரை தொடர்புகொண்டு பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.

எம்பெருமானின் பாற்குட பவனிக்கு தேவையான பாலினை வழங்க விரும்புபவர்கள் முதல் நாள் ஆலயத்தில் வழங்கலாம் என்று தாண்டியடி ஸ்ரீ சித்திரவேலாயுத பெருமான் ஆலய சங்காபிஷேக பிரதம குரு இரா. திருக்கேதீஸ்வரன் சுவாமி அகோர சிவாச்சாரியார் அவர்கள் அடியார்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

# மருதமுனையின் முதலாவது நீதிபதிக்கு கௌரவம்



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

நீதிச்சேவையில் 34 ஆண்டுகள் கடமையாற்றி ஓய்வு பெற்று செல்லும் மருதமுனையின் முதலாவது நீதிபதி ரி.எல்.அப்துல் மனாபின் சேவையைப் பாராட்டி மருதமுனை சட்டத்தரணிகள் சங்கம் ஏற்பாடு செய்த கௌரவிப்பு நிகழ்வு, சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஐ.றைசுல் ஹாதி தலைமையில் மருதமுனையில் நடைபெற்றது.

மருதமுனையில் பிறந்த ரி.எல். அப்துல் மனாப் 1983ஆம் ஆண்டு கொழும்பு சட்ட பீடத்திற்கு தெரிவானார். பின்னர் 1991ஆம் ஆண்டு சட்டத்தரணியாக நியமனம் பெற்றுக் கொண்ட இவர் 2000 நீதவானாக நியமனம் பெற்றார்.

இவர் கொழும்பு, திருகோணமலை, மூதூர், ஆகிய இடங்களில் நீதவானாகவும் அக்கரைப்பற்று, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் வவுனியா ஆகிய இடங்களில் மாவட்ட நீதிபதியாகவும் கடமையாற்றியுள்ளார்.

2017ஆம் ஆண்டு மேல் நீதிமன்ற நீதிபதியாக பதவி உயர்வு பெற்ற இவர் மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதியாகவும் யாழ்ப்பாணத்தில் அமரும் வடமாகாணத்திற்கான குடியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதியாகவும் கடமையாற்றி கடந்த டிசம்பர் மாதம் 24ஆம் திகதி ஓய்வு பெற்றார். இவர் மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி, அல்-மனார் மத்திய கல்லூரி, மட்டக்களப்பு சிவானந்தா வித்யாலயம் ஆகியவற்றின் பழைய மாணவர் ஆவார்.

நிகழ்வுகளை சட்டத்தரணிகளான அனோஜ் பிர்தௌஸ், எம்.ஐ.யாஸ்த்தீன் ஆகியோர் தொகுத்து வழங்கினார்கள். நிகழ்வின் இறுதியில் ஓய்வு பெற்ற நீதவான் ரி.எல்.அப்துல் மனாபுக்கு சட்டத்தரணிகள் சங்கத்தினரால் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

# றொட்டறி கழகத்தினால் வைத்தியசாலைக்கு உதவி



(வெல்லாவெளி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலைக்கு றொட்டறிக் கழகத்தினால் பல்வேறு உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

கல்வி பொதுத்தர சாதாரணதரம் சித்தி பெற்ற நிலையில் மரத்தால் விழுந்து பாரிய உபாதைகளுக்குட்பட்ட மாணவனுக்கு பலவிதமான மருத்துவ உபகரணங்களை றொட்டறிக் கழகத்தினர் இதன்போது வழங்கி வைத்தனர்.

மேலும் எதிர்காலத்தில் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலைக்கு தமது றொட்டறிக் கழகத்தினால் மேலும் பல உதவி களை மேற்கொள்ளவுள்ளதாக இதன்போது றொட்டறிக் கழகத்தின் மட்டக்களப்பு தலைவர் ம.ஜெகவண்ணன் தெரிவித்தார்.

தாம் மருத்துவத் துறையிலிருந்து அரசியலுக்குள் சென்றாலும் றொட்டறிக் கழகத்துடன் இணைந்து இம்மாவட் டத்தில் மருத்துவத்துறை சார்ந்து பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுக்கவுள்ள தாக இதன்போது கலந்து கொண்டி ருந்த நாடாளுமன்ற உறுப்பினர் இ.ஸ்ரீநாத் தெரிவித்தார்.

களுவாஞ்சிகுடி ஆதார வைத்திய சாலையின் வைத்திய அத்தியட்சகர் க.புவநேந்திரநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ.ஸ்ரீநாத், றொட்டறிக் கழகத்தின் மட்டக்களப்பு தலைவர் ம.ஜெகவண்ணன், மற்றும் றொட்டறிக் கழகத்தின் சுவீடன் நாட்டுக் கிளையின் பிரதிநிதிகள், சத்திரகிசிச்சை நிபுணர் வைத்தியர் பாமதி, மகப்பேற்று வைத்திய நிபுணர் வசந்தராஜா, உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

# மனநல பாதிப்புக்கு சிகிச்சை பெறும் மாணவிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

## கண்டி தேசிய வைத்தியசாலை வைத்தியர் பாலித பண்டார சுபசிங்க

(எம்.ஏ.அமீனுல்லா)



மனநலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறும் பாடசாலை மாணவிகளின் எண்ணிக்கை மிக வேகமாக அதிகரித்து வருவதாக கண்டி தேசிய வைத்தியசாலை மருத்துவரும் சட்டத்தரணியுமான பாலித பண்டார சுபசிங்க எச்சரித்துள்ளார்.

ஒரே பாலின காதல் உறவுகள் கையடக்கத் தொலைப்பேசி பாவனை உள்ளிட்ட பல காரணிகளே அவ்வாறான பாதிப்புக்குக் காரணம் என வைத்திய அதிகாரி வலியுறுத்தியுள்ளார்.

பல பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் மன உளைச்சலுக்கு உள்வாங்கப்படுகிறார்கள் என்று கூட அறியாமல் உள்ளார்கள். மேலும் குழந்தைகள் பரீட்சைக்குச் செல்ல மறுக்கும் போது தான் பல குழந்தைகளைச் சிகிச்சைக்காக அழைத்து வருகின்ற நிலை காணப்படுகின்றதாகவும் தெரிவித்தார். கண்டியில் நேற்று (22) ஊடகவியலாளர் மத்தியில் உரையாற்றுகையிலேயே வைத்திய அதிகாரி பாலித பண்டார சுபசிங்க மேற்கண்ட தகவலைத் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்துரையாற்றிய அவர், பொதுவாக ஆண்கள் மற்றும் பெண்களுக்கான பாடசாலைகளுடன் ஒப்பிடுகையில், ஆண்கள் பாடசாலைகளையும் விடப் பெண்கள் பாடசாலைகளில் பதிவாகும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதோடு, விளையாட்டுக் குழுக்களில் சேரும் புதிய சிறுவர்கள் இந்த சம்பவங்களால் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகும். குறிப்பாகப் பாடசாலை விடுதிகளிலும் இந்த நிலை காணப்படுகிறது பாடசாலை மாணவர் குழுக்களில் நடத்தப்படும் வாட்ஸ்அப் குழுக்களைப் பயன்படுத்துவதன் மூலம் பல குழந்தைகள் ஒரே பாலின காதல் உறவுகளுக்கு ஆளாகிறார்கள். குழந்தைகளிடம் பேசியதில் அது உறுதியாகியுள்ளன நகர்ப்புற பெண்கள் பாடசாலைகளில் சிறுவர்கள் மத்தியில் ஓரினச்சேர்க்கை அதிகரித்துள்ளதாகவும் இது தொடர்பான தகவல்களை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் மறைப்பதனால் சிறுவர்கள் இச்செயற்பாடுகளுக்கு அடிமையாகி தமது எதிர்கால இலக்குகளை நோக்கிய பயணத்திற்குத் தடையாக இருக்கும் நிலை உருவாகின்றன. இதனால் குழந்தைகள் போதைக்கு அடிமையாகிவிடுவது மட்டுமின்றி தற்கொலை செய்து கொள்ளும் நிலையும் உள்ளது என்றும் அவர் கூறினார். மோசமான பாலுறவு நடத்தைகளுக்கு அடிமையாவதால், இக்குழந்தைகள் எதிர்கால குடும்ப வாழ்க்கையில் தோல்வியடையும் போக்கு காணப்படுவதுடன், பாலுறவு நோய்களால் பாதிக்கப்படும் நிலையும் ஏற்படுகிறது. இதனால் ஏற்பட்ட பிரச்சினைகளினால் சில மாணவர்கள் தமது உடம்பில் காயங்களை ஏற்படுத்தியுள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளது. பாடசாலைகளின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுமென நினைத்து சில அதிபர்கள் தெரிந்தே நிலைமையை மூடி மறைப்பது ஆரோக்கியமான ஒரு நடவடிக்கையல்ல. மாற்றமாகப் பிரச்சினையின் அளவை சரியாகப் புரிந்துகொண்டு, அதற்கான தீர்வை விரைவில் காண்பதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்படவேண்டியது காலத்தின் கட்டாயத் தேவையாகும்.

இப்பிரச்சினைக்குப் பாடசாலை மட்டத்தில் தீர்வு காண முடியாது எனவும், அதற்காகக் கல்வி அமைச்சு சுகாதார திணைக்களங்களின் உதவியுடன் முறையான வேலைத்திட்டத்தைத் தயாரிக்க வேண்டும் எனவும் வைத்தியர் பாலித பண்டார சுபசிங்க மேலும் வலியுறுத்தினார்.

## மவுசாகலை தோட்ட தீ விபத்து; மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றம் உதவி

(தலவாக்கலை பி.கேதீஸ்)

மஸ்கெலியா மவுசாக்கலை தோட்டத்தில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட எட்டு குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் குழந்தைகளுக்கும் மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றத்தின் அனர்த்த நிவாரண உதவித் திட்டத்தின் ஊடாக தேவையான நிவாரண உதவிகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மலையக கல்வி அபிவிருத்தி மன்றத்தின் தலைவர் ஏ. சிவஞானம், உபதலைவர் ஆர்.விஸ்வநாதன் ஆகியோர் தலைமையில் மன்றத்தின் உறுப்பினர்கள் எதிர்வரும் 26 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை நேரில் சென்று பதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறி நிவாரணப் பொருட்களை கையளிக்கவுள்ளனர். தீ விபத்தில் உடைமைகளை இழந்தும், அத்தியாவசியப் பொருட்களைப் பறிகொடுத்தும், அகதிகளாகத் தங்கியுள்ள மக்களுக்குப் பிரதேச நலன் விரும்பிகளின் அவசர வேண்டுகோளுக்கிணங்க அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் வகையில் சமையல் பாத்திரங்கள், உடுதுணிகள், மருந்து வகைகள் மற்றும் உலர் உணவுப் பொதிகளும் வழங்கப்படவுள்ளன.

மேலும் தீ விபத்தில் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், புத்தகப் பைகள், பாதணிகள், சீருடைத் துணிகள், குழந்தைகளுக்கு 6 மாதங்களுக்குத் தேவையான பால்மா வகைகள் உடைகள் போன்றவற்றை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## உணவில் கரப்பான் பூச்சி: ஹோட்டல் உரிமையாளருக்குச் சட்ட நடவடிக்கை

(தலவாக்கலை பி.கேதீஸ்)



ஹற்றன் உணவகம் ஒன்றில் உணவில் கரப்பான் பூச்சி காணப்பட்டதால் ஹோட்டல் உரிமையாளருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஹற்றன் நகரசபை பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ்.சௌந்தர்ராகவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகத் தெரியவருவதாவது ஹற்றன் நகரில் நேற்று முன்தினம் (21) மாலை பிரபல ஹோட்டல் ஒன்றில் இருவர் பகல் உணவு சாப்பிட்டபோது உணவில் கரப்பான் பூச்சி இருந்துள்ளது. இதன் காரணமாக ஹோட்டல் உரிமையாளருடன் குறித்த இருவரும் முரண்பட்ட நிலையில் 119 துரித பொலிஸ் இலக்கத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டு ஹற்றன் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணைகளை முன்னெடுத்ததோடு ஹற்றன் நகரசபை பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ். சௌந்தர்ராகவனுக்கு முறைப்பாடு செய்யப்பட்டது. சம்பவ இடத்திற்குச் சென்ற நகரசபை பொதுச் சுகாதார பரிசோதகரின் பரிசோதனையின் பின்னர் ஹோட்டல் உரிமையாளருக்கு எதிராக ஹற்றன் நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம்

இறத்தோட்டை இந்து மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் ஆண்டு பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளதாக செயலாளர் ஷான் பிரபா தெரிவித்துள்ளார்.

பொதுக் கூட்டம் பெப்ரவரி மாதம் 23ம் திகதி பாடசாலை பிரதான மண்டபத்தில் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் 2025ம் ஆண்டிற்கான புதிய நிருவாக சபைத் தெரிவும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். பழைய மாணவர் சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொண்டு பாடசாலையின் வளர்ச்சியில் பங்கு கொள்ளுமாறு செயலாளர் ஷான் பிரபா கேட்டுக் கொள்கின்றார்.

## மலையகத்தின் மனித உரிமை பிரச்சினை தொடர்பான கலந்துரையாடல்



இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மலையகத்திற்கான உப குழு நேற்று முன்தினம் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் கூடியது.

குறித்த கூட்டம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் பேராசிரியர் தை.தனராஜ் தலைமையில் நடைபெற்றது.

மேலும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் சட்டத்தரணி கபிலன் வில்லவராஜன் உட்படக் குழுவின் ஏனைய அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர்.

மலையகத்தில் நிலவுகின்ற பல்வேறு மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதோடு ,நீண்ட கால தீர்வுகளுக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மூலம் எவ்வாறான நடவடிக்கைகளை எதிர்காலத்தில் மேற்கொள்ள முடியும் தொடர்பில் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

## புரவுன்சீக் தோட்டத்தில் நான்கு குடியிருப்புகளுக்கு தீ பரவல்

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள ஆர்.பீ.கே. பிளாண்டேசனுக்கு சொந்தமான புரவுன்சீக் தோட்ட இலக்கம் ஒன்று தொடர் குடியிருப்பில் நேற்று முன்தினம் இரவு 9 மணிக்கு தீ பரவல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. குறித்த தீ பரவலின் போது நான்கு குடியிருப்பு பகுதியில் உள்ள கூரைகள் எரிந்துள்ளதாக மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

அத்தோடு தொடர் குடியிருப்பிலுள்ள 12 வீடுகளுக்கு தீ மேலும் பரவாமல் தடுக்க தோட்ட மக்களும் மஸ்கெலியா பொலிஸார் செயற்பட்டதில் தீ கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்கள் தங்களது உறவினர் வீடுகளில் தங்கியுள்ளதாக மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார்.

## கார் - மோட்டார் சைக்கிள் விபத்து

### ஒருவர் உயிரிழப்பு



கம்பளை-கண்டி பிரதான வீதியில் குருதெனிய என்ற பகுதியில் கார் ஒன்று மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கம்பளை- கிராஉல்ல பகுதியைச் சேர்ந்த மதுர கீர்த்தி குணசேகர (வயது 58) என்பவரே உயிரிழந்தவராவார். மேசன் வேலை போன்ற பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள அவர்,கெலிஓயா பகுதியிலுள்ள கோவிலுக்கு நேற்று (22) அன்னதானம் கொடுத்து விட்டு பின்னர் வேலைக்குச் சென்று கொண்டிருந்தபோதே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது. தெல்கொட பகுதியிலிருந்து கம்பளை நோக்கி வந்த இந்த கார், வீதியை விட்டு விலகி, மோட்டார் சைக்கிளில் மோதி அருகிலிருந்த வியாபார நிலைய கட்டிடத்தில் மோதியுள்ளது. ஓட்டுநரின் நித்திரை கலக்கத்தால் விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். உயிரிழந்தவரின் சடலம் பேராதனை மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. தவுலகல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சிறுமி துஷ்பிரயோகம்; சந்தேகத்தில் ஒருவர் கைது

மஸ்கெலியா பகுதியில் உள்ள தோட்டமொன்றில் 15 வயது சிறுமி ஒருவர் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட நிலையில் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த சம்பவம் தொடர்பில் 32 வயதுடைய திருமணமான ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சிறுமி தாத்தா, பாட்டியின் பாதுகாப்பில் வாழ்ந்து வந்த நிலையில் சிறுமியின் வீட்டில் முதியோர்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் சென்று வந்ததை அவதானித்த அயலவர்கள் இது குறித்து மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளதைத் தொடர்ந்து ,சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணையின் பின்னர் இளைஞரைக் கைது செய்துள்ளனர். மேலும் சிறுமி பரிசோதனைக்காகப் பிரதேச ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சந்தேக நபர் ஹற்றன் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட போது எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளதாக மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

## போதை மாத்திரை விற்பனை: ஹற்றனில் ஒருவர் கைது

(தலவாக்கலை பி.கேதீஸ்)

ஹற்றன் நகரில் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களை இலக்கு வைத்து சட்டவிரோதமான முறையில் போதை மாத்திரைகள் விற்பனை செய்து வந்த மூலிகை விற்பனை நிலையமொன்றை நேற்று முன்தினம் (21) மாலை சுற்றிவளைத்து அங்கு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 2111 போதை மாத்திரைகளைக் கைப்பற்றியதாக தலவாக்கலை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதாகவும், சட்டவிரோதமான முறையில் போதைப்பொருள் விற்பனை செய்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டதாகவும் தலவாக்கலை பொலிஸ் விசேட அதிரடிப்படை கட்டளைத் தளபதி பொலிஸ் பரிசோதகர் எம். பி. இளங்கசிங்க தெரிவித்தார்.

சில வருடங்களாக சந்தேக நபர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான பாடசாலைச் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களை இலக்கு வைத்து போதை மாத்திரைகளை விற்பனை செய்து வந்ததாக எம்.பி.இளங்கசிங்க மேலும் தெரிவித்தார்.

# சீமான் வீட்டை முற்றுகையிட முயன்றவர்கள் கைது

பெரியார் குறித்த நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானின் சர்ச்சை பேச்சை கண்டிக்கும் வகையில், பெரியார் கூட்டமைப்பு மற்றும் மே 17 இயக்கத்தினர் நேற்றுக் காலை அவரது வீட்டை முற்றுகையிட உள்ளதாக அறிவித்திருந்தனர். முன்னதாக இது தொடர்பான சுவரொட்டிகள் சென்னை மாநகர் முழுவதும் ஒட்டப்பட்டிருந்தன. சென்னை நீலாங்கரையில் உள்ள சீமான் வீடு முன்பாகவும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. இதனிடையே சென்னை நீலாங்கரையில் முற்றுகையிடும் அமைப்பினருக்கு எதிர்ப்பு தெரிவிக்க சீமான் வீடு முன்பாக ஏராளமான நாம் தமிழர் கட்சியினரும் நேற்று முன்தினம் இரவு முதலே குவிந்திருந்தனர்.

இதனைத்தொடர்ந்து நீலாங்கரையில் உள்ள நா.த.க. தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வீட்டுக்கு பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. பெரியார் கூட்டமைப்பு மற்றும் மே 17 இயக்கத்தினர் நேற்று அவரது வீட்டை முற்றுகையிட உள்ள நிலையில், ஏராளமான பொலிஸார் அங்கு குவிக்கப்பட்டிருந்தனர்.



இந்நிலையில் பெரியாரை அவமதித்த சீமானை கைது செய்யக் கோரி போராட்டம் நடந்தது. இதனிடையே பாதுகாப்புக்காக நாம் தமிழர் கட்சியினரும் ஏராளமானோர் குவிந்ததால் அந்த பகுதியில் பரபரப்பும், பதற்றமும் நிலவியமை குறிப்பிடத்தக்கது.




## பெரியாரா, பிரபாகரனா..? மோதிப்பார்த்துவிட வேண்டியதுதான்

சீமான் பிரபாகரனுடன் எடுத்த புகைப்படம் போலி என்ற சர்ச்சை எழுந்திருந்தநிலையில், இதுதொடர்பாக சென்னையில் செய்தியாளர்களை சந்தித்த சீமான், "எத்தனை பேர்தான் அந்த புகைப்படத்தை எடிட் செய்துள்ளீர்கள். நீங்கள் அனைவரும் பெரிய எடிட்ராக இருக்க வேண்டியவர்கள். ஆனால் காமெடி செய்து கொண்டிருக்கின்றீர்கள். 15 ஆண்டுகளாக நீங்கள் எங்கு இருந்தீர்கள்..

அந்த புகைப்படம் முதல்முறையாக வெளியான போதே சொல்ல வேண்டியது தானே. பெரியார் மீது விமர்சனம் வைத்த பின்னர், பிரபாகரனுடன் எடுத்த புகைப்படம் பொய் என்று வரிந்து கட்டிக்கொண்டு வருகின்றீர்கள்.



இதனால் பெரியாரா, பிரபாகரனா என்று ஆகிவிட்டது.. மோதிப் பார்த்துவிட வேண்டியதுதான். பெரியாரை விமர்சித்ததற்கு திராவிடர் கழகமே அமைதியாக இருக்கிறது. ஆனால் தற்போது இது தொடர்பில் ஏனைய அமைப்பினர்தான் பேசிக் கொண்டே இருக்கிறார்கள். கி.வீரமணியை பதில் சொல்ல சொல்லுங்கள்" என்றார்.

## சாத்தூர் பட்டாசு ஆலை விபத்து:

## உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு 20 இலட்சம் இழப்பீடு வழங்குங்கள்





சாத்தூர் பட்டாசு ஆலை விபத்தில் உயிரிழந்த 27 பேரின் குடும்பங்களுக்கு தலா ரூ.20 இலட்சம் இழப்பீடு வழங்க வேண்டும் என்ற பசுமைத் தீர்ப்பாய ஆணையை அரசு செயல்படுத்த வேண்டும் என பா.ம.க நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "விருதுநகர் மாவட்டம் சாத்தூரை அடுத்த அச்சங்குளம் கிராமத்தில் உள்ள ஸ்ரீமாரியம்மாள் பட்டாசு ஆலையில் கடந்த 2021ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி நடந்த பயங்கர வெடி விபத்தில் 27 பேர் உயிரிழந்து நான்கு ஆண்டுகள் நிறைவடையவுள்ள நிலையில், அவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.20 இலட்சம் வீதம் இழப்பீடு வழங்க வேண்டும் என சென்னையில் உள்ள தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் தென்மண்டல அமர்வால் பிறப்பிக்கப்பட்டு, உச்சநீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்டத் தீர்ப்பு இன்னும் செயல்படுத்தப்படவில்லை.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கும் விவகாரத்தில் தமிழக அரசு இந்த அளவுக்கு அலட்சியம் காட்டுவது கண்டிக்கத்தக்கது.

அத்துடன் பசுமைத் தீர்ப்பாயம் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு தலா ரூ.20 இலட்சமும், படுகாயமடைந்தவர்களுக்கு தலா ரூ.15 இலட்சமும் இழப்பீடாக வழங்க வேண்டும் என்று அதே ஆண்டு ஜுன் மாதத்தில் தீர்ப்பளித்தது.

அந்த விபத்தில் தாய், தந்தை ஆகிய இருவரையும் இழந்த நந்தினி என்ற 15 வயது சிறுமி எதிர்காலத்தை எப்படி எதிர்கொள்வது என்பது தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார். குடும்பத்தின் ஒற்றை வாழ்வாதாரமாக விளங்கிய தந்தையை இழந்து பல குழந்தைகள் தவித்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களின் நலனில் சிறிதும் அக்கறையில்லாமல் தமிழக அரசு செயல்படக்கூடாது என்றார்.

## டில்லி பொலிஸாரை பா.ஜ.க தவறாக பயன்படுத்துகிறது

தலைநகர் டில்லியில் ஆத்மி கட்சியின் ஆட்சி நடைபெற்று வருகிறது. முதலமைச்சராக அதிஷி செயல்பட்டு வருகிறார்.

இதனிடையே, 70 தொகுதிகளை கொண்ட டில்லி சட்டசபைக்கு அடுத்த மாதம் 5ஆம் திகதி ஒரேகட்டமாக தேர்தல் நடைபெற உள்ள நிலையில் தேர்தலில் பதிவாகும் வாக்குகள் அடுத்த மாதம் 8ஆம் திகதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.



இந்நிலையில் டில்லி சட்டசபை தேர்தலில் ஆம் ஆத்மி, பாஜக, காங்கிரஸ் உள்ளிட்ட முக்கிய கட்சிகள் களமிறங்கியுள்ளன. தேர்தல் நெருங்கி வரும் நிலையில் அரசியல் கட்சியினர் தீவிர பிரசாரம், வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன் டில்லி பொலிஸை பாஜக தவறாக பயன்படுத்துவதாக ஆம் ஆத்மி கட்சி தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால் குற்றஞ்சாட்டியுள்ளார். இது தொடர்பாக கெஜ்ரிவால் கூறியதாவது,

டில்லி பொலிஸை பா.ஜ.க தவறாக பயன்படுத்துகிறது. டில்லி பொலிஸார் அனைவரும் பா.ஜ.க.வுடன் இருக்கின்றனர். மக்களின் பாதுகாப்பிற்கு யாரும் இல்லை. ஆம் ஆத்மி கட்சியின் பிரசாரத்திற்கு இடையூறு செய்ய வேண்டுமென மத்திய உள்துறை அமைச்சகத்திடமிருந்து நேரடியாக உத்தரவு வந்துள்ளதாக மூத்த பொலிஸ் அதிகாரி என்னிடம் கூறினார் என்றார்.

## மகா கும்பமேளா:

## இந்து தெய்வங்கள் குறித்து அவதூறு கருத்து: உ.பி.யில் இருவர் கைது

உத்தர பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெறும் மகா கும்பமேளா குறித்தும் இந்து தெய்வங்கள் குறித்தும் சமூக வலைத்தளங்களில் அவதூறான கருத்து தெரிவித்தது தொடர்பாக பாரபங்கி மாவட்டத்தில் 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒருவர் பெயர் கம்ரான் ஆல்வி, மற்றொருவர் அபிஷேக் குமார். அவர்கள் பதிவு செய்த கருத்துகள் இந்துக்களிடையே கடும் கொந்தளிப்பை ஏற்படுத்திய நிலையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



இதுபற்றி பாரபங்கி கோட்வாலி பொலிஸ் நிலைய அதிகாரி அலோக் மணி திரிபாதி கூறுகையில், "கம்ரான் ஆல்வி என்பவர் மகா கும்பமேளா தொடர்பாக தனது முகநூல் பக்கத்தில் ஒரு வீடியோ வெளியிட்டுள்ளார். இது சிலரது மனதை புண்படுத்தியது. உயர் அதிகாரிகள் அந்த வீடியோவை ஆய்வு செய்து விசாரணை நடத்தினர். பின்னர் கம்ரான் ஆல்வி கைது செய்யப்பட்டார். அதேபோன்றே கைது செய்யப்பட்ட மற்றொரு நபரான அபிஷேக் குமார், ஜெய்த்பூர் அருகே உள்ள போஜா கிராமத்தைச் சேர்ந்தவர் என்றும், இந்து தெய்வங்கள் மற்றும் கும்பமேளா தொடர்பாக ஆட்சேபனைக்குரிய கருத்துகளை அவர் பதிவிட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தா.

### 100இற்கும் மேற்பட்டோருக்கு மாரடைப்பு

இது இவ்வாறிருக்க கும்பமேளா நிகழ்வில் திடீர் மாரடைப்பு காரணமாக பாதிக்கப்பட்ட 100ற்கும் மேற்பட்ட பக்தர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர். மேலும் 183 நோயாளிகள் அவசர சிகிச்சையை பெற்றுள்ளனர். 580 பேருக்கு சிறிய அறுவை சிகிச்சைகள் வெற்றிகரமாக செய்யப்பட்டுள்ள அதிகாரிகள் தெரிவித்தனர்.

## அதானி மகன் திருமணத்தில்

## மன்னர் சாள்ஸ் - பாப்பரசர் பங்கேற்பா..?

உத்தர பிரதேசத்தின் பிரயாக்ராஜ் நகரில், 144 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் மகா கும்பமேளா சிறப்பாக நடந்து வருகிறது. இந்நிகழ்ச்சியில், அதானி குழுமத்தின் தலைவர் கௌதம் அதானி கலந்து கொண்டார்.



அப்போது அதானியிடம், அவருடைய மகனின் திருமணம் பிரபலங்கள் பங்கு பெறும் கொண்டாட்டங்கள் நிறைந்த மகா கும்பமேளாவாக இருக்க போகின்றதா? என நிருபர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்த அதானி, நிச்சயம் இல்லை என மறுத்துள்ளார். அவருடைய மகன் ஜீத்தின் திருமணம் எதிர்வரும் பெப்ரவரி 7ஆம் திகதி நடைபெறும் என கூறினார். அதானி தொடர்ந்து கூறும்போது, ஜீத்தின் திருமணம் மிக எளிமையாக, முழு பாரம்பரிய வழியிலேயே இருக்கும் என்றார்.

குஜராத்தின் ஆமதாபாத் நகரில், ஜீத் அதானிக்கும் மற்றும் சூரத் நகரின் பிரபல வைர வியாபாரியான ஜியாமின் ஷாவின் மகளான திவா ஷாவுக்கும் இடையே திருமணம் நடைபெற உள்ளது. இந்நிலையில் சமீப நாட்களாக, சமூக ஊடகத்தில் பல்வேறு செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

உலகளவிலான நட்சத்திரங்கள் மற்றும் பிரபலங்கள், இந்த திருமணத்தில் கலந்து கொள்வார்கள் என தகவல் பரவின. திருமண விருந்தினர்களாக எலான் மஸ்க், பில் கேட்ஸ், உட்பட மன்னர் சாள்ஸ் மற்றும் பரிசுத்த பாப்பரசர் கூட கலந்து கொள்வார்கள் என செய்திகள் பரயிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பரந்தூரையடுத்து:

## வேங்கைவயல் செல்கிறாரர்?

### - விஜய்யின் அடுத்த வியூகம்

புதுக்கோட்டை மாவட்டம், வேங்கைவயலில் குறிப்பிட்ட ஒரு பிரிவினர் குடிக்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் மனித கழிவு கலக்கப்பட்ட விவகாரத்தில் இதுவரை மற்றொரு பிரிவினர் கைது செய்யப்படாத நிலையில் பரந்தூர் விவசாயிகளை சந்தித்ததை போல் வேங்கைவயலில் பாதிக்கப்பட்ட மக்களை சந்திக்க தவெக தலைவர் விஜய் செல்வாரா என்ற கேள்வி எழுந்துள்ளது.

தமிழக வெற்றிக் கழகம் எனும் அரசியல் கட்சியை விஜய் கடந்த ஆண்டு பெப்ரவரியில் ஆரம்பித்து 11 மாதங்கள் ஆன நிலையில் கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் கட்சியின் முதல் மாநில மாநாடு நடந்து முடிந்தது.

அந்த மாநாட்டில் வைத்து கட்சியின் கொள்கை, தங்கள் அரசியல் எதிரி யார் என்பதை கடுமையாக விமர்சித்து விஜய் தெரிவித்திருந்தார். அது போல் அடுத்தடுத்து தமிழகத்தில் நடந்த சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளுக்கும் குரல் கொடுத்தார்.



இந்த நிலையில் அடுத்தபடியாக வேங்கைவயலுக்கும் விஜய் செல்ல வேண்டும் என தொண்டர்கள் விரும்புகிறார்களாம். பரந்தூருக்கு பிறகு வேங்கைவயல் என X வலைத்தளத்தில் விஜய்க்கு கோரிக்கைகள் பறக்கின்றனவாம். எனவே வேங்கைவயலுக்கும் விஜய் செல்லக் கூடும் என தெரிவிக்கப்படுகின்றது.

## மரக்கறி ஏற்றிச்சென்ற லொறி கவிழ்ந்ததில் 11 பேர் பலி




கர்நாடக மாநிலம் காவேரி மாவட்டத்தின் சவனூரில் இருந்து 25ற்கும் மேற்பட்டோர் காய்கறிகளை லொறியில் ஏற்றி கொண்டு உத்தர கன்னடம் மாவட்டத்தின் கும்தா பகுதியில் உள்ள சந்தை நோக்கி நேற்று அதிகாலை சென்று கொண்டிருந்தனர்.

அந்த லொறி அர்பைல் காட் என்ற பகுதியில் சென்றபோது திடீரென கட்டுப்பாட்டை இழந்து வீதியோரம் இருந்த பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த கோர விபத்தில் 10 காய்கறி வியாபாரிகள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் மற்றும் 15 பேர் படுகாயமடைந்தனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அருகில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த சம்பவம் பற்றி பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

உலக வலம் WORLD NEWS

பா. கிருஷிகா

# துருக்கி ஹோட்டல் தீ விபத்து: மேலும் 76 பேர் பலி





துருக்கியில் உள்ள பிரபல தனியார் ஹோட்டலில் ஏற்பட்ட தீ விபத்தில் குறைந்தது 76 பேர் உயிரிழந்தனர்.

துருக்கியின் பொலு நகரில் உள்ள கிராண்ட் கர்தல் என்ற பனிச்சறுக்கு ஹோட்டலில் (துங்குவதற்கு மற்றும் பனிச்சறுக்கு செய்வதற்கான வசதிகளை கொண்ட ஹோட்டல்) செவ்வாய்க்கிழமை அதிகாலையில் இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது. மரக்கட்டைகளால் கட்டப்பட்ட அந்த 12 அடுக்குமாடி ஹோட்டலில் தீ விபத்து ஏற்பட்ட இரவில், அங்கே 234 பேர் தங்கியிருந்தனர். பள்ளி விடுமுறை காலம் என்பதால் பனிச்சறுக்கில் விருப்பம் கொண்ட சுற்றுலா பயணிகள் பலர் தங்கள் குடும்பத்துடன் அந்த ஹோட்டலில் தங்கியிருந்துள்ளனர்.

முதலில் 10 பேர் இறந்ததாக தகவல்கள் தெரிவித்தன. ஆனால் சில மணி நேரத்திற்கு பிறகு துருக்கியின் உள்துறை அமைச்சகம் இறந்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதை உறுதி செய்தது. இதில் இரண்டு பேர் தீயில் இருந்து தப்பிக்க முயன்று ஹோட்டலில் தாங்கள் தங்கியிருந்த தளத்தில் இருந்து வெளியே குதித்ததால் உயிரிழந்தனர். ஹோட்டலில் தீயை அணைக்க 12 மணி நேரமானதுடன் விபத்து தொடர்பாக ஹோட்டல் உரிமையாளர் உட்பட 9 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாக துருக்கியின் நீதித்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த விபத்தில் 10 வயது நீச்சல் வீராங்கனை, அவரது தாய், ஹோட்டலின் சமையல் கலைஞர், உள்ளூரில் பிரபலமான தொழிலதிபரின் மகள், மற்றும் அவரது 17 வயது பேத்தி, எழுத்தாளர் ஒருவர் மற்றும் அவரது மனைவி, இரண்டு குழந்தைகள், பல்கலைகழக பேராசிரியர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக துருக்கி அரசு உறுதிப்படுத்தியுள்ளது. உயிரிழந்தவர்கள் யார் என்ற விபரம் இன்னும் முழுமையாக தெரியவரவில்லை. இந்த விபத்தில் காயமடைந்த 51 பேரில் ஒருவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் 17 பேர் சிகிச்சை முடிந்து வீடு திரும்பிவிட்டதாகவும் துருக்கி சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. விபத்து ஏற்பட்ட போது, ஜன்னல் வழியாக வெளியே குதித்து தப்பிக்க சிலர் துணிகளை பயன்படுத்தியுள்ளனர். சமூக ஊடகங்களில் ஜன்னல்களிலிருந்து அந்த துணிகள் தொங்கிக் கொண்டிருக்கும் வீடியோ பரவி வருகிறது.

தீ விபத்துக்கான காரணம் என்னவென்று உறுதியாக தெரியவில்லை. எனினும், ஹோட்டலின் நான்காவது மாடியில் உள்ள உணவக பகுதியிலிருந்து மற்ற தளங்களுக்கு தீ பரவியதாக முதல் கட்ட தகவல்கள் தெரிவிப்பதாக பொலு நகரின் ஆளுநர் அப்துலசிச் அய்தின் தெரிவித்தார். சம்பவ இடத்துக்கு 267 அவசர சேவை ஊழியர்கள் வந்தடைந்ததுடன் அந்த ஹோட்டலில் தீ விபத்திலிருந்து தப்பிக்க இரண்டு வழிகள் இருந்துள்ளன என உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. அங்கிருந்து 30 முதல் 35 பேரை காப்பாற்றியதாக ஹோட்டல் ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

தீ விபத்து குறித்து விசாரிக்க குழு ஒன்று நியமிக்கப்பட்டிருப்பதாக துருக்கி நீதித்துறை தெரிவித்துள்ளது. இந்த ஹோட்டலில் 2024ஆம் ஆண்டு அரசு சோதனை நடத்தியதாகவும் அப்போது தீ விபத்து ஏற்படும் வகையிலான விதி மீறல்கள் எதுவும் இல்லை என்று சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். எனினும் துருக்கி பொறியாளர்கள் மற்றும் கட்டட கலைஞர்கள் அமைப்பு, ஹோட்டலில் தானியங்கி தீயணைப்பான் வைக்கப்படவில்லை என்று தெரிவித்துள்ளது. ஹோட்டலின் இணைய தளத்தில் உள்ள அதன் புகைப்படங்களில் தானியங்கி தீயணைப்பான் காணப்படவில்லை” என்று அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஏதேனும் விதிமீறல்கள் இருக்கின்றனவா என்று தெரியவில்லை. எனினும் உயிர் பிழைத்தவர்களின் கூற்றுப்படி அந்த ஹோட்டலில் தீ பரவலை கண்டறிந்து எச்சரிக்கும் கருவி வேலை செய்யவில்லை. தப்பித்து செல்வதற்கான வழிகள் தெளிவாக குறிப்பிடப்படவில்லை என்று அந்த அமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துருக்கி ஜனாதிபதி எர்டோகன், தீ விபத்து ஏற்பட காரணமாக, கவனக்குறைவாக இருந்த அனைவர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார். துருக்கியில் இந்த சம்பவத்தின் காரணமாக தேசிய அளவில் ஒரு நாள் துக்கம் அனுசரிக்கப்படுகிறது. புதன்கிழமை மாலை வரை துருக்கியின் தேசிய கொடி அரை கம்பத்தில் பறக்கவிடப்படும் என துருக்கி ஜனாதிபதி தனது எக்ஸ் சமூக வலைத்தளப் பக்கத்தில் தெரிவித்திருந்தார்.

துருக்கியின் முன்னாள் பிரிட்டன் தூதர் சர் பீட்டர் வெஸ்ட்மாகோட், தான் அந்த பகுதியில் கடந்த காலங்களில் தங்கியிருந்ததாகவும் இந்த சம்பவம் தனிப்பட்ட முறையில் தன்னை பாதித்ததாகவும் “துருக்கி பற்றி அக்கறை கொண்ட எவருக்கும் இத்தனை பேர் உயிரிழந்துவிட்டனர் என்பது மிகவும் சோகமான செய்தியாகும்” என அவர் தெரிவித்தார்.

# இஸ்ரேலின் இராணுவத் தலைவர் பதவி விலகுவதாக அறிவிப்பு



காஸா பகுதியில் 15 மாத காலப் போரைத் தொடர்ந்து அமுலுக்கு வந்த போர் நிறுத்தத்தின் சில நாட்களுக்குப் பின்னர், இஸ்ரேலின் இராணுவத் தலைவர் ஹெர்சி ஹலேவி (Herzi Halevi) பதவி விலகுவதாக செவ்வாய்க்கிழமையன்று (21) தெரிவித்தார்.

2023 ஒக்டோபர் 7 ஆம் திகதி பலஸ்தீனிய ஹமாஸ் ஆயுததாரிகள் இஸ்ரேல் மீது எல்லை தாண்டிய தாக்குதலை நடத்தியபோது ஏற்பட்ட பாரிய பாதுகாப்புக் குறைபாட்டிற்குப் பொறுப்பேற்று எதிர்வரும் மார்ச் 6 ஆம் திகதி பதவி விலகுவதாக அவர் அறிவித்தார். இது குறித்து பாதுகாப்பு அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் லெப்டினனட் ஜெனரல்,

“இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் (IDF) இஸ்ரேல் குடிமக்களைப் பாதுகாக்கும் பணியில் தோல்வியடைந்துவிட்டது.

இந்த பயங்கரமான தோல்விக்கான எனது பொறுப்பு ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணிநேரமும் என்னை வாட்டுகிறது. அந்த மன உளைச்சல் எனது வாழ் நாள் முழுவதும் அப்படியே இருக்கும்” என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேநேரம், ஹமாஸ் மற்றும் அதன் ஆளும் திறன்களை மேலும் சிதைப்பதற்கும், பணயக்கைதிகள் திரும்புவதை உறுதி செய்வதற்கும் இராணுவம் தொடர்ந்து போராடும். மேலும், ஆயுதம் தாங்கிய குழுக்களின் தாக்குதல்களால் இடம்பெயர்ந்த இஸ்ரேலியர்கள் தாயகம் திரும்புவதற்கு உதவும் என்று அவர் மேலும் சுட்டிக்காட்டினார். ஹெர்சி ஹலேவியின் அறிவிப்புக்கு பின்னர், IDF இன் தெற்குக் கட்டளைத் தலைவரான மேஜர் ஜெனரல் யாரோன் ஃபிங்கெல்மேனும் (Yaron Finkelman) பதவி விலகுவதாக அறிவித்தார்.

இஸ்ரேல், அமெரிக்கா மற்றும் பிற நாடுகளால் பயங்கரவாத அமைப்பாக தடைசெய்யப்பட்ட ஹமாஸுடன் ஒப்பந்தம் செய்யப்பட்ட காஸா போர்நிறுத்தம் மற்றும் பணயக்கைதிகள் விடுதலை ஒப்பந்தம் ஆரம்பித்து மூன்று நாட்களுக்குப் பின்னர் அவர்களது இராஜினாமாக்கள் வந்துள்ளன. 2023 ஒக்டோபர் 7 அன்று அத்துமீறிய ஹமாஸ் தாக்குதலில் 1,200 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர் மற்றும் சுமார் 250 பணயக்கைதிகள் சிறைபிடிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# ரஷ்யா மீது பொருளாதாரத் தடை விதிக்கப்படும் : ட்ரம்ப் எச்சரிக்கை



உக்ரேனில் போரை முடிவுக்கு கொண்டு வருவது குறித்து பேச்சுவார்த்தை நடத்த ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் மறுத்தால், அந்நாட்டின் மீது பொருளாதார தடை விதிக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் செவ்வாய்க்கிழமை (21) தெரிவித்தார்.

சாத்தியமான கூடுதல் தடைகள் குறித்த விபரங்களை ட்ரம்ப் தெரிவிக்கவில்லை. 2022 பெப்ரவரியில் உக்ரேன் மீதான ஆக்கிரமிப்பிற்காக அமெரிக்கா ஏற்கனவே ரஷ்யாவிற்கு பெரிதும் தடை விதித்துள்ளது. உக்ரேனுக்கு ஆயுதங்களை அனுப்பும் விவகாரத்தையும் தனது நிர்வாகம் கவனித்து வருவதாகக் கூறிய ட்ரம்ப், உக்ரேனுக்கு ஆதரவாக ஐரோப்பிய ஒன்றியம் மேலும் பலவற்றைச் செய்ய வேண்டும் என்ற தனது கருத்தையும் வலியுறுத்தினார்.

அதேநேரம், உக்ரேன் போரை நிறுத்த தலையிடுமாறு சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கிற்கு அழைப்பு விடுத்ததாகவும் ட்ரம்ப் தெரிவித்தார்.

இதேவேளை பதவியேற்ற ஒரு நாள் கழித்து வொஷிங் டன் வெள்ளை மாளிகையில் ஊடகவியலாளர்களிடம் உரையாற்றிய ட்ரம்ப், அமெரிக்காவுடனான ஐரோப்பிய ஒன்றியத்தின் வர்த்தக ஏற்றத்தாழ்வுகளை சரிசெய்ய வேண்டியதன் அவசியத்தை மேற்கோள் காட்டினார். இதன்போது, ட்ரம்ப் ஐரோப்பிய ஒன்றியத்தை கட்டணங்களுடன் தாக்குவதாகவும் சபதம் செய்தார். அதேநேரம், எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி முதல் சீனத் தயாரிப்புப் பொருட்களுக்கு 10 சதவீத வரி விதிப்பது குறித்து பரிசீலித்து வருவதாகவும் தெரிவித்தார்.

அமெரிக்காவிற்குள் சட்டவிரோத குடியேற்றம் மற்றும் போதைப்பொருள் கடத்தலை தடுக்க தவறிவிட்டதாக குற்றம் சாட்டி, கனடா மற்றும் மெக்சிகோ மீது 25 சதவீத வரிகள் மீதான விதிப்பு தொடர்பான எச்சரிக்கைகளுக்கு மத்தியில் இந்த அறிவிப்பு வந்தது. உத்தியோகபூர்வ வர்த்தக தரவுகளின்படி, மெக்ஸிகோ, கனடா மற்றும் சீனா ஆகியவை அமெரிக்காவால் இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு முன்னணி ஆதாரங்களாக உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# காஸாவிற்கு அத்தியாவசியப் பொருட்கள்; 900 லொறிகளில் அனுப்பியது ஐ.நா. சபை







போர் நிறுத்தம் அமுலுக்கு வந்துள்ள நிலையில், காஸாவில் நிவாரண பொருட்கள் செல்வதில் எவ்வித பிரச்சினையும் இல்லை என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. ஐ.நா. அமைப்பின் உதவி செய்யும் குழுக்கள், அரசு மற்றும் தனியார் துறைகள் சார்பில் அத்தியாவசியப் பொருட்கள் காஸாவுக்கு லொறிகள் மூலம் எடுத்துச்செல்லப்பட்டன.

நிவாரணம் மற்றும் அத்தியாவசிய பொருட்களுடன் செல்லும் லொறிகளில் திருட்டு சம்பவங்கள் அதிகளவிலும், கொள்ளை சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை என ஐ.நா. தெரிவித்துள்ளது. ஆங்காங்கே சிறிய திருட்டுகள் மட்டுமே நடைபெற்றுள்ளன.

இஸ்ரேல்– காஸா இடையிலான போர் நிறுத்தத்தின் மூன்றாம் நாளில் கிட்டத்தட்ட 900 லொறிகளில் உதவி பொருட்கள் காஸாவிற்குள் சென்றதாக ஐ.நா. தெரிவித்துள்ளது. இது ஒப்பந்தத்தில் கோரப்பட்ட 600 லொறிகளை விட கணிசமான அளவு அதிகம் ஆகும்.

மத்திய கிழக்கு அமைதி செயல்முறைக்கான துணை ஐ.நா. ஒருங்கிணைப்பாளராக இருக்கும் முஹன்னத் ஹாடி நேற்று (செவ்வாய்க்கிழமை) காஸாவில் இருந்து ஜெருசலேமுக்கு திரும்பினார். அப்போது ஐ.நா. செய்தியாளர்களிடம் பேசிய ஹாடி “பலஸ்தீனியர்களை தெருக்களில் நம்பிக்கையுடன் எதிர்நோக்குவது, சிலர் வீடு திரும்புவது, சிலர் வீதிகளை சுத்தம் செய்ய தொடங்குவதை பார்க்கும் போது கடந்த 35 ஆண்டுகால வாழ்க்கையில் மிகவும் மகிழ்ச்சியான நாட்களில் ஒன்று” என தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அவர், ஐ.நா. உலக உணவுத் திட்டத்தால் நடத்தப்படும் பொது சமையலறை, பிற இடங்களில் குடும்பங்களுடன் அவர் நடத்திய பேச்சுவார்த்தையில், அவர்கள் அனைவரும் மனிதாபிமான உதவி தேவை என்று தன்னிடம் கூறியதாக தெரிவித்தார். மேலும் வீட்டிற்குச் செல்லவும், வேலை செய்யவும், பணம் சம்பாதிக்கவும் அவர்கள் விரும்புவதாக தெரிவித்தார்.

## இலங்கை கிரிக்கெட்

# யாப்பு திருத்தத்தின் பின் நிர்வாகத் தேர்தல்

இலங்கை கிரிக்கெட் சபை தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்தல் நேற்று பிற்பகல் 3.30 மணியுடன் முடிவடைந்த நிலையில் மார்ச் 31 ஆம் திகதி தேர்தலை நடத்தத் தேர்தல் குழு தீர்மானித்துள்ளது. ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி மாலனி குணரத்ன உள்ளிட்ட ஐந்து பேர் கொண்ட தேர்தல் குழுவினால் கிரிக்கெட் தேர்தல் நடத்தப்படவுள்ளது. மேலும் இம்முறை கிரிக்கெட் யாப்பில் புதிய சீர்திருத்தங்களுடன் குறித்த தேர்தல் நடைபெறவுள்ளமை சிறப்பம்சமாகும்.

இம்முறையும், கிரிக்கெட் தலைவர் ஷம்மி சில்வாவின் அணியும் களத்தில் இறங்குகிறது.அத்தோடு தலைவர் பதவிக்கான அவரது வேட்புமனுவை 50 விளையாட்டு சங்கங்கள் உறுதிப்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கிரிக்கெட்டின் முன்னாள் செயலாளர் மோகன் டி சில்வா இராஜினாமா செய்துள்ளதால், அந்தப் பதவிக்கு புதிய ஒருவரை அல்லது பதில் செயலாளர் கிருஷாந்த கபுவத்தேவை நியமிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இலங்கை கிரிக்கெட் சபையின் 2023 நிர்வாகத் தேர்தலில் ஷம்மி சில்வா வாக்கெடுப்பின்றி தலைவர் பதவிக்குத் தேர்வானதோடு போட்டியின்றியும் தேர்ந்தெடுக்கப்பட்டவராவார்.



கிரிக்கெட் நிர்வாக சபை தேர்தல்களில் பயன்படுத்தப்படும் வாக்குகளின் எண்ணிக்கை குறித்து ஆராய்ந்த இலங்கை கிரிக்கெட் நிர்வாகம், சமீபத்தில் கிரிக்கெட் யாப்பில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தைச் செய்து, வாக்களிக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 147 இலிருந்து 60 ஆகக் குறைத்தது.

இலங்கை கிரிக்கெட் தலைவர் ஷம்மி சில்வா தலைமையில் நடைபெற்ற விசேட பொதுக் கூட்டத்தில், கிரிக்கெட்டின் நிதி நிர்வாகத்தின் வெளிப்படைத்தன்மையை வலுப்படுத்தும் வகையில், தணிக்கைக் குழு, முதலீடு மற்றும் பட்ஜெட் குழு மற்றும் அவை தொடர்புடைய கொடுக்கல் வாங்கல் குழு ஆகியவற்றை நிறுவுவதற்கு உறுப்பினர்கள் ஏகமனதாக ஒப்புதல் அளித்தனர். இந்த ஆண்டு இலங்கை கிரிக்கெட் தேர்தல்கள் புதிய நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் நடைபெறும், மேலும் வரவிருக்கும் இலங்கை கிரிக்கெட் தேர்தலுக்குத் தகுதியான வேட்பாளர்களின் பட்டியலைத் தேர்தல் குழு வெளியிடும். பழைய கிரிக்கெட் வாக்களிப்பு முறையின் கீழ், ஒவ்வொரு உறுப்பினர் சங்கத்திற்கும் இரண்டு வாக்குகள் இருந்தன,ஆனால் திருத்தியமைக்கப்பட்ட புதிய வாக்களிப்பு முறையில் தகுதி பெற்ற கிரிக்கெட் கிளப்புகள் மற்றும் சம்மேளங்களுக்கு தலா ஒரு வாக்குரிமை மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. அந்த வாக்குரிமையை தீர்மானிக்கு காரணிகளையும் வகுத்துள்ளது.

கிளப்களுக்கு இடையேயான கிரிக்கெட் போட்டிகளில் வெளிப்படுத்தப்படும் திறமைகளுக்கு ஏற்ப வாக்களிக்கும் சந்தர்ப்பம் தீர்மானிக்கப்படுகிறது.அதேவேளை விளையாட்டுக் கழகங்களில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கிரிக்கெட் வளர்ச்சிக்கு அவை ஆற்றிய பங்களிப்பைக் கருத்தில் கொண்டு வாக்களிக்கும் உரிமைகள் வழங்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பிரதேச செயலாளர் வெற்றிக்கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டி







**(செல்லையா பேரின்பராசா)**

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக நலன்புரிச்சங்கத்தின் ஏற்பாட்டில் பிரதேச செயலாளர் வெற்றிக்கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டி நேற்று முன்தினம் பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் நடைபெற்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களுக்கு இடையில் நடைபெற்ற இந்த சுற்றுப்போட்டியில் பன்னிரெண்டு (12) பிரதேச செயலகங்கள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.




## சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் கிரிக்கெட் போட்டி

# இலங்கை அணிக்கு குமார் சங்கக்கார தலைமை




கிரிக்கெட் களத்தில் பல வெற்றிகளைப் பெற்ற குமார் சங்கக்கார மற்றும் உலகெங்கிலும் உள்ள சிரேஷ்ட வீரர்கள் பங்கேற்கும் சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணியின் கெப்டனாக மீண்டும் கிரிக்கெட் களத்திற்கு வருகிறார் சங்கக்கார.

அவருடன், இந்தியாவின் கிரிக்கெட் கடவுள் சச்சின் டெண்டுல்கர், அவுஸ்திரேலியாவின் ஷேன் வொட்சன், இங்கிலாந்தின் இயோன் மோர்கன், மேற்கிந்திய தீவுகள் பிரையன் லாரா மற்றும் தென்னாப்பிரிக்காவின் ஜாக் காலிஸ் ஆகியோர் இந்த போட்டியில் தமது நாட்டு அணிகளை வழிநடத்துவார்கள்.

டெஸ்ட் விளையாடும் ஆறு முக்கிய நாடுகளைச் சேர்ந்த முன்னாள் சிரேஷ்ட கிரிக்கெட் வீரர்கள் பங்கேற்கும் இந்தப் போட்டி, அடுத்த மாதம் பெப்ரவரி 22 ஆம் திகதி முதல் மார்ச் 16 ஆம் திகதி வரை இந்தியாவின் மூன்று நகரங்களில் நடைபெற உள்ளது. மும்பை டி. ஒய்., படேல் மைதானம், ராஜ்கோட் நிரஞ்சன் ஷா மைதானம் மற்றும் ராய்ப்பூர் நாராயண் சிங் சர்வதேச மைதானம் ஆகியவை பெயரிடப்பட்டுள்ளன.

இலங்கை மற்றும் இந்தியா அணிகளுக்கு இடையிலான போட்டி பெப்ரவரி 22 ஆம் திகதி மாலை 7 மணிக்கும், அதைத் தொடர்ந்து 24 ஆம் திகதி இலங்கை மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கும், 27 ஆம் திகதி இலங்கை மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கும், மார்ச் 2 இலங்கை மற்றும் அவுஸ்திரேலியா அணிகளுக்கும், அரையிறுதிப் போட்டி மார்ச் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இறுதிப் போட்டி மார்ச் 16 அன்று நடைபெற உள்ளது.

இலங்கை அணியில் ரொமேஷ் கலுவிதாரண, சனத் ஜெயசூரிய, முத்தையா முரளிதரன், திலகரத்ன தில்ஷான், சமிந்த வாஸ், தம்மிக்க பிரசாத், இசுரு உதான, திசர பெரேரா, தில்ருவன் பெரேரா, உபுல் தரங்க, அசேல குணரத்ன, சாமர கபுகெதர, மஹேல உடவத்தே, நுவன் குலசேகர மற்றும் சதுரங்க டி சில்வா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் கிரிக்கெட் போட்டி, கிரிக்கெட்டின் முன்னோடியும் 10,000 டெஸ்ட் ஓட்டங்களை அடித்த முதல் துடுப்பாட்ட வீரரான சுனில் கவாஸ்கர் தலைமையிலான நிர்வாகக் குழுவால் ஏற்பாடு செய்கிறது. 1970கள் மற்றும் 1980களில் கிரிக்கெட்டில் ஆதிக்கம் செலுத்திய மேற்கிந்திய தீவுகள் அணியின் கிரிக்கெட் நாயகன் விவியன் ரிச்சர்ட்ஸ் மற்றும் தென்னாப்பிரிக்க கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் ஷான் பொல்லாக் ஆகியோர் லீக் கமிஷனர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த லீக் குறித்து கருத்து தெரிவித்த சுனில் கவாஸ்கர்,

சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் கிரிக்கெட் போட்டி, விளையாட்டின் அனைத்து மகிமைகளையும் வெளிப்படுத்துவதாக அமையும், விளையாட்டின் மிகவும் நீடித்த சில சிறந்த வீரர்களைக் களத்திற்குக் கொண்டுவருவதாகவும் கூறினார். இந்தப் போட்டி விளையாட்டின் உணர்வையும் பொழுதுபோக்கையும் நிறைவேற்றும் ஒரு முதன்மையான தளமாக இருக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

## புத்தளத்தில் நீச்சல் போட்டி





**(எம்.யூ.எம்.சனூன்)**

புத்தளம் நேர்ச்சர் விளையாட்டுக் கழகத்தில் நீச்சல் பயிலுனர்கள் கலந்துகொண்ட நீச்சல் போட்டிகள் அண்மையில் புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கிலுள்ள நீச்சல் தடாகத்தில் நடைபெற்றது.

120 போட்டியாளர்கள் கலந்துகொண்ட இப்போட்டிகளில், வயது அடிப்படையில் வயது 8 இன் கீழ் மற்றும் 10, 12, 14, 16, 18 மற்றும் 18 க்கு மேல் திறந்த பிரிவுகளில் வெற்றி பெற்றவர்களுக்குத் தங்கப் பதக்கம், வெள்ளிப் பதக்கம், வெண்கலப் பதக்கம் அணிவிக்கப்பட்டதுடன் கலந்துகொண்ட அனைவருக்கும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. நேர்ச்சர் விளையாட்டு கழக தலைவரும், நீச்சல் பயிற்றுவிப்பாளரும், தேசிய நீச்சல் பயிற்சியாளர் சங்கத்தின் உறுப்பினருமான ஏ.எல்.எம்.ஹிஷாம்கான் போட்டிகளை ஏற்பாடு செய்திருந்தார்.

இந்நிகழ்வின் அதிதிகளாக IMARA SOFTWARE SOLUTION, I MEDIA NETWORKS நிறுவனங்களின் பணிப்பாளர் பொறியியலாளர் ரின்சாத் அஹ்மத், கராத்தே போதானாசிரியரும், WSKA தலைவரும், தேசிய கராத்தே போட்டி நடுவருமான சிஹான் எம்.பைரூஸ் மற்றும் நேர்ச்சர் விளையாட்டு கழக பொருளாளர் எம்.எம்.முர்ஷித் ஆகியோர் கலந்து கொண்டனர்.

புத்தளம் பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது நீச்சல் கழகமான நேர்ச்சர் விளையாட்டு கழகம் மூலம் Free Style, Butterfly stroke, Back stroke, Breast stroke ஆகிய அனைத்து வகை நீச்சல் முறைகளும் கற்பிக்கப்பட்டு அகில இலங்கை மட்டத்திலான நீச்சல் போட்டிகளுக்குப் போட்டியாளர்களை முன் நிறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## உதைப்பந்தாட்ட வீரரின் மனைவிக்கு அவதூறு பதிவிட்ட சிறுவன் கைது



இங்கிலாந்தைச் சேர்ந்த ஆர்சனல் எனும் உதைப்பந்தாட்ட கழக அணியின் வீரர் கய் ஹவர்ட்ஸின் மனைவிக்கு சமூக ஊடகத்தில் அவதூறு மற்றும் மிரட்டல் செய்தி அனுப்பிய சிறுவன் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜேர்மனி நாட்டைச் சேர்ந்த உதைப்பந்தாட்ட வீரர் கய் ஹவர்ட்ஸ் இங்கிலாந்தின் பிரபல உதைப்பந்தாட்ட கழகமான 'ஆர்சனல்' அணிக்காக விளையாடி வருகிறார். இந்நிலையில், கடந்த 12 ஆம் திகதி மென்செஸ்டர் அணியுடனான போட்டியில் ஆர்சனல் அணி தோல்வியைத் தழுவியது. அந்த போட்டியில் வெற்றியடையக் கிடைத்த வாய்ப்பை கய் ஹாவர்ட்ஸ் நழுவவிட்டதாகக் கூறப்படுகிறது.

இதனால், விரக்தியடைந்த அந்த அணியின் ரசிகரான வட லண்டன் பகுதியைச் சேர்ந்த 17 வயது சிறுவன் ஒருவன் கய் ஹவர்ட்ஸின் மனைவியான சோபியா ஹாவர்ட்ஸ்க்கு சமூக ஊடகத்தில் அவதூறு செய்திகள் அனுப்பியுள்ளார்.

மேலும், கர்ப்பமாக இருக்கும் சோபியாவின் குழந்தைக்குச் சிலர் கொலை மிரட்டலும் விடுத்ததாகக் கூறப்படுகிறது.

இந்த செய்திகள் குறித்து சோபியா தனது சமூக ஊடகக் கணக்கில் பகிர்ந்ததைத் தொடர்ந்து அந்த செய்திகள் அனுப்பிய சிறுவனைக் கண்டுபிடித்த அந்நாட்டு பொலிஸார் அவரை கைது செய்து பிணையில் விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2025 ஜனவரி 23ம் திகதி வியாழக்கிழமை தயார் செய்யப்பட்டு வெளியிடப்பட்டது.